பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஐப்பசி 30 | வியாழக்கிழமை 16.11.20174 | கதிர் 11

## கோபாலரத்தினம் காலமானார்



சிரேஷ்ட பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம்

பக்கம் 18

## ஜெனிவா தீர்மானத்தை செயற்படுத்தாவிடின்

# வடக்கு – கிழக்கில் கிளர்ச்சி வெடிக்கும்

### அரசுக்கு மாவை கடும் தொனியில் எச்சரிக்கை



கொழும்பு, நவம்பர் 16

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றவில்லையெனில் தமிழரின் நம்பிக்கையையும் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் மைத்திரி அரசு இழக்கும் நிலை ஏற்படும். ஜனநாயகப் பாதையிலிருந்துவிலகிமீண்டும்மக்கள்கிளர்ச்சிஏற்படவும்இடமுண்டு. ஆகவே வடக்கு, கிழக்கு மக்களை மீண்டும் கிளர்ச்சிக்குள் தள்ளிவிட முயலாதீர்கள்.

பக்கம் 03

## வடமராட்சி கிழக்கில் சுனாமி எனப் பதற்றம்

### கிழக்கிலும் மக்கள் அல்லோல கல்லோலம்

யாழ்ப்பாணம், நவ. 16

சுனாமி ஏற்படவுள்ளது என்ற வதந்தி நேற்று நாட்டின் கரையோரப் பகுதிகளில் பரவியதை அடுத்துக்கரையோரமக்கள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டனர். குறிப் பாகக் குடாநாட்டில் வடமராட்சிகிழக்குப்பகுதியில் நேற்றுக் காலை

பக்கம் 18



## வாள்வெட்டுக் கும்பல்களுக்கும் பொலிஸார் சிலருக்கும் தொடர்பு

### இந்த நிலைமை தெற்கிலும் உள்ளது என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்



யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளவாள்வெட்டுச்சம்பவங்கள் தொடர்பில்நான்என்னசெய்வது எனக்கேள்விஎழுப்பியவடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன் பேசுவார் எனத் தெரிவித்தார்.

மேலும் வாள்வெட்டுக் கும்பல்களுக்கும் பொலிஸாரில் சிலருக்கும் தொடர்பு இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆளுநர்,இந்தநிலைமை

பக்கம் 18

## அரச வேலை வழங்காவிடின் தேர்தலைப் புறக்கணிப்போம்

### வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் அரசுக்கு எச்சரிக்கை




எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம், நவ. 16

வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தேர்தலுக்கு முன்னர் அரச வேலை வாய்ப்புக்களை வழங்காவிடின்நடைபெறவுள்ள உள்ளூராட்சித்தேர்தலைப் புறக் கணிப்போம்.

இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர் வடக்கு மாகாண வேலையற்றபட்டதாரிகள்.

அரசவேலைவாய்ப்பை

பக்கம் 18

## தனியார் காணிகளில் இருக்கும் இராணுவம் யாழ்.கோட்டைக்கு

### மைத்திரிக்கு வடக்கு ஆளுநர் யோசனை

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். குடாநாட்டில்தனியார் காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை யாழ்.கோட்டைக்குள் மாற்றுமாறு கோரி ஜனாதிபதிக்குத் தாம் கடிதம் அனுப்பியுள்ளார் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்

பக்கம் 18

## 3 தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு; வவுனியா வர சாட்சி ஒருவர் இணக்கம்

### மற்றைய இருவரின் முடிவு தெரியாதாம்

யாழ்ப்பாணம், நவ. 16

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கின் 3 சாட்சிகளில் ஒருவர் வவுனியா மேல் நீதிமன்றுக்கு வந்து சாட்சியமளிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். எனினும், மற்றைய 2 சாட்சிகளும் வெளிநாட்டில் இருப்பதால் அவர்களின் முடிவை அறிய முடிய

பக்கம் 03



## தீர்வுக்குத் தடை பெரும்பான்மையினரா? சம்பந்தனின் கூற்று கபடத்தனமானது!

### கடுமையாகச் சாடுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, நவ. 16

இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணமுடியாத மைக்குப் பெரும்பான்மைச் சமூகம்மட்டுமேகாரணம்எனக் கபடமான ஒரு கருத்தை முன்வைத்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

– இவ்வாறுகடுமையாகச்சாடியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்

பக்கம் 18

## சந்திகளில் கூடுவோரை விசாரிப்பதற்கு உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 16

வடக்கு மாகாணத்தில் சந்திகளில் கூடிநின்று அரட்டை அடிப்பவர்கள், கும்பலாக மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களை விசாரணை செய்யவேண்டும். இரவு வேளைகளில்

பக்கம் 18

### ஆள்கொணர்வு மனுக்கள் விசாரணை;

## இராணுவத் தளபதிக்கு நேற்று யாழ்.நீதிமன்று அழைப்பாணை

யாழ்ப்பாணம், நவ. 16

தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமூவர்தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணையில், வழக்கின் பிரதிவாதிகளான இராணுவத் தளபதி, யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மற்றும் சட்டமா அதிபருக்கு

பக்கம் 18

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தமிழ் எம்.பிக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## கண்டிச் சிறைச்சாலை விஜயத்தின் பின் ஆனந்தன் எம்.பி. பகிரங்க கோரிக்கை



கொழும்பு, நவ. 16

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தமிழ் எம்.பிக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்டி சிறைச்சாலை விஜயத்தின் பின் ஆனந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி சிறைச்சாலைக்கு விஜயம் செய்த பின் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சிறைச்சாலைகளில் முறையான விசாரணைகளின்றிப்பலவருடங்களாகத் தவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நாட்டில் உள்ள அனைத்துத்தமிழ் எம்.பிக்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவும், நடவடிக்கை எடுக்கவும் முன்வரவேண்டும்.

சைட்டம் பிரச்சினைக்கு ஒரு விசேட குழு அமைத்து தீர்வு கண்டதைப் போன்று, தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்திற்கும் ஒரு விசேட குழு அமைத்து அரசியல் கைதிகளின் நிலைமைகளை ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் துரிதமாகத் தீர்வு கண்டு விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த அரசியல்கைதிகள்என்னிடம் கேட்டுள்ளனர்.

கண்டி சிறைச்சாலையில் 11 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். மற்றுமொருவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர். ஏனையோர் மலையகத்தின் பல பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர்.

நடுத்தர வயதுடைய இந்தக் கைதிகள் தங்களைப் பார்வையிடுவதற்கும் தங்களுடைய நிலைமைகளைக் கேட்பதற்கும் அரசியல்வாதிகளோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ வருவதில்லை எனக் கவலை கொண்டிருக்கின்றார்கள்.

மலையகத் தலைநகராகிய கண்டி சிறைச்சாலையில் பல வருடங்களாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பாக மலையகத் தமிழ் எம்.பிக்கள் எவரும் தங்கள் நிலைமைகளை அறிவதற்கு வருவதில்லை என்பது குறித்து மிகுந்த மன வருத்தமடைந்துள்ளார்கள்.

இங்கு பத்து வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் உட்பட அனைவரும் பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள். இங்கு தண்டனை பெற்றவர்களும், வழக்கு விசாரணை முடியாதவர்களும் இருக்கின்றார்கள். தங்களுடைய வழக்கு விசாரணைகள் துரிதமாக நடத்தப்படுவதில்லை என அவர்கள் கவலையோடு கூறினார்கள். கடந்த பத்து வருடங்களாக இங்கு சிறைவாசம் அனுபவித்து வருகின்ற ஒரு கைதிக்கு எதிராக 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றில் ஒரு வழக்கில் 2 வருட சிறைத் தண்டனையும், ஒரு வருட புனர்வாழ்வுத் தண்டனையும் விதிக்கப் பட்டுள்ளது. மிகுதி இரண்டு வழக்குகளின் விசாரணைகள் மிகவும் தாமதமாகவே நடைபெறுகின்றன என அவர் கூறினார்.

நீண்டகால இடைவெளியில் வழக்குத் தவணைகள் போடப்படுகின்றன எனவும் எப்போது அந்த வழக்குகள் முடிவடை யும், அவற்றில் என்ன வகையான தீர்ப்பு வழங்கப்படும் என்பது தெரியாதுள்ளது என தெரிவித்த அவர் மிகவும் மனம் நொந்த நிலையில் காணப்பட்டார்.

இன்னுமொரு கைதியுடைய வழக்கில் பொலிஸாருக்கு எதிராகப் பிடியாணை கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எட்டு தவணைகள் கடந்துவிட்டன. ஆனால் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்தில் வழக்குத் தவணைக்கு சமுகமளிப்பதில்லை. வழக்கு தொடர்ந்து தவணையிடப் படுகின்றது. நீதிமன்றத்திற்கு வருகை தராமல் உள்ள அந்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வழக்குகளைத் தொடர்ச்சியாக விசாரணை செய்வதற்கு பொலிஸார் ஒத்துழைப்பதில்லை. அதேபோன்று வழக்கு சம்பந்தமான பல விடயங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களுக்காக நீதிமன்றம் காத்திருக்க வேண்டிய நிலையும் உள்ளது. இதனால் தங்களுடைய வழக்கு விசாரணைகள் மிகவும் தாமதமடைந்துள்ளன என்றும் அந்தக் கைதிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் மீது எந்த காரணத்தைக் கொண்டும் குற்றம் சுமத்தப் படுவதற்கு இடமளிக்கப்படுவதில்லை என்றும் எந்தவோர் இராணுவ வீரரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என அரசாங்கம் கூறுகின்றது.

இராணுவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற அரசின் இந்த நிலைப்பாடும் தங்களுடைய வழக்குகள் தாமதமடைவதற்கு முக்கிய காரணமாகும் என்றும் அவர்கள் கூறினர்.

மற்றுமோர் அரசியல் கைதிக்கு எதிராக 8 வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றன. அவற்றில் சாட்சிகளாக இருக்கின்ற 7, 8 பேரில் ஒருவருக்கு ஒரு வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இன்னுமொரு சாட்சிக்கு 7 வருடங்கள் சிறைத் தண்டனைவழங்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு விசாரணைகள் முறையாக நடைபெறுவதில்லை. சாட்சிகளையும் உரிய முறையில் நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதில்லை.

இன்னுமொரு கைதி ஒன்றரை வருடங்களாக நடைபெற்ற விசாரணையின் போது சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டிருந்தார் எனவும், அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், வருடக்கணக்கான நாள்கள் கழிந்த பின்னரும், அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

அதனால் அந்த வழக்கு விசாரணை இழுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த அறிக்கையை சமர்ப்பிக்காத பொலிஸாருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தக் கைதி தெரிவித்தார்.

எப்போது இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எப்போது தனது வழக்கு முடிவடையும் எனத் தெரியாமல் அவர் தவித்துக் கொண்டிருக்கின்றார்.

நல்லிணக்கம், மனிதாபிமானம் என்றெல்லாம் பேசப் படுகின்றது. ஆனால், அரசியல் கைதிகள் விடயத்தில் அது கணக்கில் எடுக்கப்படுவதில்லை.

சைட்டம் பிரச்சினைக்கு ஜனாதிபதி ஒரு விசேட குழுமை அமைத்து தீர்வு கண்டதைப் போன்று தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கும் ஒரு விசேட குழு அமைத்து நடவடிக்கை எடுத்து, தங்களை விரைவாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அந்தக் கைதிகள் என்னிடம் கோரியுள்ளார்கள் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (100)

## 152 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற சுங்க அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிகை!

வவுனியா, நவ. 16

152 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் சுங்க அதிகாரிகள் நால்வருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப் பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் குறித்த குற்றப்பத்திரிகை நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். குருசிங்க முன்னிலையில் கையளிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் பிரதிவாதிகள் ஒவ்வொருவரையும் ஒரு லட்சம் ரூபா பிணை மற்றும் 2 மில்லியன் ரூபா சரீரப் பிணையில் விடுவிப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த நபர் களுக்கு நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளமையுடன் இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் திகதி இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான வாகன உதிரிப் பாகங்களை வரி செலுத்தாமல் கொண்டு செல்வதற்காக பஞ்சி காவத்தை வியா பாரி ஒருவரிடம் 152 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்றமை தொடர்பில் இந்த நான்கு சுங்க அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


**உலக சைவத் திருச்சபையின்**
**ஆதரவில்**
**கலாநிதி வி.அடியார் விபுலாநந்தாவின்**
**ஏற்பாட்டில்**

**விவாத அரங்கு**

**தலைப்பு:**
**தமிழரின் சமயம் சைவமா? ஹிந்துவா?**

**தலைமை:**
**பரா.நந்தகுமார்**
(பொதுச் செயலாளர், அகில இலங்கை சைவ மகாசபை)

**இடம்:**
**நாவலர் மண்டபம்**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**காலம்:**
**19.11.2017 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்:**
**பிற்பகல் 3 மணிக்கு**
(அனைவரும் வருக)

# வாள்களுடன் நடமாடினர் என 3 இளைஞர்கள் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், நவ. 16

வாள்களுடன் நடமாடிய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் 22 தொடக்கம் 24 வயதுகளை உடையவர்கள். கொக்குவில், கோப்பாய் மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் உள்ளன. மூவரும் தேடப்பட்டு வந்தநிலையில் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

சந்தேகநபர்கள் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

# வீட்டுக்குள் அத்துமீறினார் என பொலிஸ் சாரதி ஒருவர் கைது

குடும்பப் பெண் ஒருவருடன் தொடர்பு வைத்து வீடொன்றுக்குள் அத்துமீறினார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் – நல்லூர்ப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவருடன் அவர் தொடர்பு வைத்து வந்துள்ளார். அவர்களின் உறவு தொடர்பில் அந்தப் பெண்ணின் கணவருக்குத் தெரியவந்துள்ளது.

அவர் நேற்று முன் தினம் இரவு மனைவியிடம் இதுபற்றி விசாரித்துள்ளார். இதனால் கணவன் – மனைவி இடையே சண்டை மூண்டுள்ளது. அந்தப் பெண் கணவனுக்குச் சுடுதண்ணீரை ஊற்றிவிட்டு வீட்டிலிருந்து உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டார்.

கணவன் தனது மனைவியின் கைபேசியிலிருந்து வேறு ஒரு பெண் மூலம் பொலிஸ் சாரதிக்குத் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார்.

அந்தப் பெண்ணின் அழைப்பை நம்பிப் பொலிஸ் சாரதி, தொடர்புவைத்திருந்த பெண்ணின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு பொலிஸ் சாரதியை மிளகாய் தூள் வீசிப் பிடித்த குடும்பத்தலைவர், அவருக்கு நல்ல பூசை கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொலிஸாரை வரவழைத்து அவர்களிடம் பொலிஸ் சாரதியைக் குடும்பத் தலைவர் ஒப்படைத்துள்ளார்.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சாரதியை நீதிமன்றில் முற்படுத்துவது தொடர்பில் உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐ.தே.க., ஜே.வி.பி. உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியில் இணைந்தனர்

ஐக்கியதேசியக்கட்சி, ஜே.வி.பி. செயற்பாட்டாளர்கள்சிலர்ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ளனர்.

ஜே.வி.பியின் கண்டி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திமுது அபேகோன் உள்ளிட்ட கண்டி மாநகர சபையின் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் சிலரே நேற்று ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவைச்சந்தித்துசுதந்திரக்கட்சியில் இணைந்துகொண்டனர்.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி நாட்டுக்காக முன்னெடுத்திருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக அவர்கள் தெரிவித்தனர்.

மத்திய மாகாண முதலமைச்சர்திலினபண்டாரதென்னக்கோனுடன் வருகை தந்த இவர்கள், ஜனாதிபதியைச் சந்தித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# வட்டுவாகல் பாலத்தில் வெடிப்பு; வாகனப் போக்குவரத்து பாதிப்பு



முல்லைத்தீவு – வட்டுவாகல் பாலத்தில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாகக் கனரக வாகனங்களின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் பாலம் மிகப் பிரதானமான பாலமாக காணப்படுவதுடன் மிக ஒடுக்கமாகவும் சேதமடைந்தும் காணப்படுவதால் மிகவிரைவில் சீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

## 3 தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

இவ்வாறு சட்டமா அதிபர் சார்பில் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

தமதுவழக்கைஅநுராதபுரம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றுவதற்குச் சட்டமா அதிபருக்கு கட்டளையிடுமாறு அரசியல் கைதிகள் மூவர் சார்பில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் எழுத்தாணை மனு முன்வைக்கப்பட்டது.

அந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோதே இந்த அறிவிப்பைச் சட்டமா அதிபர் மன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

இதனால் அவர்கள் இருவரின்முடிவைஅறிவதற்காகமனு மீதான கட்டளையை எதிர்வரும் 29ஆம்திகதிக்கு ஒத்திவைத்தது கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்று.

2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லையான புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டுப் பகுதியில் 18 கடற்படைச் சிப்பாய்களுக்கும், 8 இராணுவச்சிப்பாய்களுக்கும் உயிரிழப்பை விளைவித்தனர் என்று தெரிவித்து பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் இராசதுரை திருவருள், மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ம.சுலக்சன், க.தர்சன் ஆகிய இருவருக்கும்எதிராக2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றத்தில்சட்டமாஅதிபரால்குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

முதலாம் எதிரியான இராசதுரை திருவருள் என்பவரை இந்த வழக்கிலே சேர்த்து 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கின் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் உள்ளதாகத் தெரிவித்து கடந்த செப்ரெம்பர் மாதம் வழக்கை அநுராதபுரம் மேல்நீதிமன்றுக்குச்சட்டமாஅதிபர் மாற்றினார்.

மொழிப் பிரச்சினை மற்றும் தமதுசார்பில்சட்டத்தரணிகளை நியமிப்பது உள்ளிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டித் தமக்கு எதிரான வழக்கை வவுனியா மேல் நீதிமன்றில் நடத்துமாறு அரசியல் கைதிகள் மூவரும் கோரினர். அதற்காக அவர்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தனர். அவர்களுக்குஎதிராகப் பல்வேறு போராட்டங்கள் வடக்கில் முன்னெடுக்கப்படுகின்றன. யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அரசியல் கைதிகளின் உறவுகளை நேற்று நீதிமன்றுக்குஅழைத்துச்சென்றசிவன் பவுண்டேசன்நிறுவுனர்கணேஷ்வரன் வேலாயுதம் இது தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் கைதிகள் மூவருக்கும் எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட உள்ளது. ஒரு சாட்சி வவுனியாவரசம்மதம்தெரிவித்துள்ளார். எனினும்ஏனைய இரு சாட்சிகள் வெளிநாட்டில் உள்ளனர். அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அதனால்காலஅவகாசம்வேண்டும் எனச் சட்டமா அதிபர் சார்பில் நேற்று அநுராதபுரம் மேல் நீதிமன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

29 ஆம் திகதி சட்டமா அதிபரின் முடிவல்ல. அன்றைய தினம்மேன்முறையீட்டுநீதிமன்று கட்டளை வழங்கும் என எமது சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எமக்கு வாக்குறுதி தந்துள்ளார்.

செப்ரெம்பர் மாதம் இந்த வழக்கை நாம் போட்டிருக்க வேண்டும். அது காலதாமதம் ஆகியது.

ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகளிடம் நீதி கோரினோம். ஐ.நாவிடம் நீதி கேட்டுள்ளோம். நீதித்துறையில் ஜனாதிபதி தலையிட முடியாது. அவரைத் தலையிடவேண்டும் எனக் கோர முடியாது. நீதிமன்றத்தை நாடியே நாம் நீதியைப் பெறவேண்டும்.

நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின்அரசியல் கைதிகள் அனை வருக்கும் பொது மன் னிப்பு வழங்கிப் புதிய அத்தியாயத்தை தொடங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம் – என்றார்.

பெருங்குற்றம்செய்தவர்கள் வெளியில் இருக்கின்றார்கள். சிறு சிறு குற்றங்கள் செய்திருக்கலாம். அவர்களை விடுவிக்க வேண்டும். உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் மகனின் உடல் நிலை மோசமாகியுள்ளது. அவனுக்குக் கடுமையான நோய்கள் தோன்றியுள்ளன என அரசியல் கைதி தர்சனின் அம்மா சித்திரா தெரிவித்தார்.

கணவன்தான் பார்த்து வந்தார். நான் நாலைந்து வருடமாக பார்க்கவில்லை. இப்பதான் மகனைப் பார்த்தேன். கணவன் தற்போது உயிருடன் இல்லை. ஆண் துணையின்றி எனது பெண் பிள்ளைகளை வளர்த்து வருகிறேன். எனது மகனைவிடுதலைசெய்யவேண்டும் என்று சுலக்சனின் தாயார் புஸ்பமாலா வலியுறுத்தினார்.

கடவுளிடம் தான் மன்றாடினோம். வழக்கில் வென்று வவுனியாவுக்கு மாற்றப்படும் எனநம்புறோம்என்று அரசியல் கைதியின் திருவருளின் மனைவி சுபைதா தெரிவித்தார்.

(107)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் வைத்து அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

தமிழருக்கான தீர்வை எட்டும் நோக்கிலும் நல்லிணக்கத்தை அடிப்படையாகவும் கொண்ட 20 விடயங்களுக்கு வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நல்லிணக்கத்துக்கு வழிகோலும் வரவு – செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால்கூட்டமைப்பு அதற்கு ஆதரவுவழங்கும்என்றும்அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு– செலவுத் திட்டம் மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

போரால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், காயங்களுடன் அவயவங்களை இழந்து வாழ்வாதாரமின்றிவாழ்ந்துவருபவர்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இடம்பெற்றுள்ள முன்மொழிவுகள் வரவேற்கத்தக்கவை. வடக்கைப் பொறுத்த மட்டில் ஒரு இலட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன.

ஏற்கனவே முன்மொழியப்பட்ட இந்திய வீட்டுத் திட்டம் இன்னும் நடைமுறைப் படுத்தவில்லை. தற்போதைய வரவு – செலவுத் திட்டத்தில் 50 ஆயிரம் கல் வீடுகள் நிர்மாணிக்க உத்தேசித்தமையை நாங்கள் வரவேற்கிறோம். எனினும், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வீடுகள் தேவையாக உள்ளன.

போரால் இடம்பெயர்ந்து வாழ்பவர்களும், இந்திய அகதி முகாம்களில் உள்ளவர்களும் தமது சொந்த நிலங்களுக்குத்திரும்பினால்எந்தவொருவசதியும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்த வரவு – செலவுத்திட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்குமாக 20 திட்டங்களை முன்மொழிந்தமை போரால் ஏற்பட்ட காயங்களுக்குத் தீர்வாக அமையும்.

வரவு – செலவுத்திட்டத்தில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்குத்தேவையானவிடயங்கள் உள்ளடக்கப்பட்டாலும் ஐஸ் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவேண்டும். அதற்காக மேலதிகமாக நோர்வே அரசு உதவி செய்ய 15 கோடி ரூபாவுக்குமேல்வழங்கமுன்வந்துள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வரவு– செலவுத் திட்டமொன்றைக் கொண்டு வந்தமையால் அதற்கு ஒத்துழைக்க வேண்டியது கூட்டமைப்பின் பொறுப்பு.

பாதுகாப்புக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். எமது நிலங்கள் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளன. எங்களது நிலங்களை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பிரயோகம்செய்கின்றனர். எமது நிலங்களை விடுவிக்க வேண்டும். நிலையான நல்லிணக்கம் ஏற்படவேண்டுமானால் காணிகள் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும்.

யுத்தத்தின்போது இருதரப்பிலும் 400 பில்லியன் ரூபா செலவு ஏற்பட்டதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார். இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் விளைவாகவே விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இத்தகைய பணத்தை விரயம்செய்யவேண்டிஏற்பட்டது. தற்போதைய ஆட்சியிலாவது இழுத்தடிப்பு செய்யாது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

வரவு– செலவுத் திட்டத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் நல்லிணக்கத்தைக் காண்பதற்கான 20 அடிப்படை விடயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடன் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதுகுறித்துநடத்தியிருந்த பேச்சுகளின் அடிப்படையிலேயே பல திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சமூகச் சீரழிவுகளுக்கு எதிரான பேரெழுச்சி இயக்கம் அவசியம்

யாழ்ப்பாணத்தில் மீண்டும் வாள்வெட்டுக் கலாசாரம் தலைதூக்கியிருக்கின்றது.

இளைஞர் சமுதாயம் ஒன்று கட்டறுந்து, தறிகெட்டு, எல்லை மீறிச் செயற்படுகின்றது என்பதன் வெளிப்பாடுதான் இது.

யுத்த காலத்தில் மிகக் கட்டுக்கோப்பான - மிக நேர்த்தியான - சமுதாய விழுமியங்களை வெளிப்படுத்திய உயரிய சமூகம் நாங்கள்.

எங்கள் பண்பியல்புகள், விழுமியங்கள், காலசாரங்கள் மதிப்பார்ந்தவை ; சிறப்பானவை என்று போற்றப்படுபவை.

அவை எல்லாவற்றுக்கும் நேர்மாறான கருத்தியலை இந்த வாள்வெட்டுக் கலாசாரம் வெளிப்படையாகப் பிரதிபலித்து நிற்கிறது.

அநாகரிகமான - கேவலமான - ஒரு சமூகக் கூட்டமாக எங்களை அடையாளப்படுத்தும் விதத்தில் இந்த விடயங்கள் அரங்கேறுகின்றன.

பாடசாலை மாணவ மட்டத்தில் தொற்றிக் கொள்ளும் சில பண்பியல்புகளே இந்தச் சமூகச் சீரழிவுக்கு முக்கிய காரணம் என்பது கவனிக்கத்தக்கது.

மனித உரிமைகளை மதித்தல் என்ற பெயரில் சமூகக் கட்டுபாடுகள் திறந்து விடப்பட்டமையே இந்தச் சீரழிவு நிலை தோன்றக் காரணமோ என்ற சந்தேகமும் பல தரப்பினருக்கும் எழாமல் இல்லை.

முன்னைய காலத்தில் குருபக்தி, பெற்றோரின் கண்டிப்பு, பாடசாலை சமூகத்தின் தீவிர கண்காணிப்பு என்று நமது மாணவக் கட்டமைப்பு மீது போடப்பட்டிருந்த விலங்குகள் - கட்டுப்பாடுகள் - எல்லாம் உலக மயமாதல் என்ற போக்கில் இன்று உடைத்தெறியப்பட்டுவிட்டன.

ஓர் ஆசிரியன் மாணவனைக் கண்டித்தால் அடுத்த நாள் மனித உரிமைகள் அதிகாரியோ அல்லது சிறுவர் நல அதிகாரிகளோ பாடசாலைக்குள் விசாரணை என்று புகும் நிலைமை காணப்படுகின்றது. அது தப்பு என்பதல்ல எமது வாதம்.

இதனால், எமக்கேன் வீண்வம்பு என்று கருதும் ஆசிரியர்கள், எப்போதுமே மாணவர்களில் இருந்து தூர விலகி நின்று போதிக்கும் போக்கையே கடைப்பிடிக்கின்றனர் என்பதுதான் எமது கவலை; விசனம் எல்லாம்.

மாணவனின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் பற்றிப் பேசும் அதிகார வர்க்கம், மாணவ சமுதாயம் - அடுத்த இளம் தலைமுறை - தறிகெட்டுப் போவதைத் தடுப்பதற்கான மார்க்கத்தை - வழியை - முன்மொழியவில்லை அல்லது தரவில்லை என்பதே யதார்த்த உண்மையாகும்.

ஒருபுறம் வகை, வகையான போதைப் பொருள்களின் தாராளப் புழக்கம்.

மறுபுறம் தொலைக்காட்சி, சினிமா, கைத்தொலைபேசி என்று மாணவனின் வாழ்வைச் சீரழிக்கவே காத்திருக்கும் உயர் தொழில்நுட்ப வசதிகள்.

போன தலைமுறையில் தனது வாழ்வில் இளைஞன் சிந்தித்துக் கூடப் பார்க்க முடியாத பல விடயங்களை இந்தத் தலைமுறை இளைஞனை இலகுவாக - விரைந்து - இரகசியமாக - நெருங்க வைக்கின்றன கைத்தொலைபேசியும் அதன் தொழில்நுட்பமும்.

போதைப்பொருள் பாவனை, மது போன்ற சீரழிவு வசதிகளில் மூழ்கிக் கிடக்கும் இளைஞனை பிறவழிகளிலும் - பாலியல் ரீதியிலும் - தவறாக வழி நடத்த வழி செய்கின்றது இந்தக் கைத்தொலைபேசிகள் என்பது மறுக்கற்பாலது.

கடந்த தலைமுறையில் கெட்டுப் போக வாய்ப்புகள் இல்லாததால் இளம் சமுதாயம் கட்டுப்பாடாக இருந்தது.

ஆனால் இந்தத் தலைமுறையின் வாழ்வியல்பு, நல்லவர்களையும் கெட்டுப் போக வைக்கச் செய்யும் அளவுக்கு கட்டுப்பாடற்ற ஒரு நிலையை ஏற்படுத்தி நிற்கின்றது.

இந்த இக்கட்டிலிருந்து எப்படி வெளியே வருவது என்று நமது சமூகம் - இனம் - விரைந்தும், தீவிரமாகவும், முக்கியத்துவம் கொடுத்தும் சிந்திக்க வேண்டிய அவசர வேளை வந்திருக்கின்றது என்றே கருதுகின்றோம்.

வெறும் சட்டம், ஒழுங்கு, பொலிஸ், காவல்துறை நடவடிக்கை என்பன மூலம் சமாளித்து, எதிர்கொண்டு, திருத்திவிடக் கூடிய விவகாரம் அல்ல இவை.

சமூகச் சீர்கேட்டிலிருந்து - கட்டறு அவல நிலையிலிருந்து - நமது இளம் சமூகத்தை மீட்பது என்பது ஒரு சமூகப் பேரெழுச்சி நடவடிக்கையாகக் கிளர்ந்தெழுவதாக அமைய வேண்டும். அப்படி அமைந்தால் மட்டுமே இந்தச் சீரழிவு அரக்கனை நமது சமூகத்தில் இருந்து விரட்டியடிக்க முடியும்.

வாள்வெட்டு விவகாரமாக இருக்கலாம், போதைப் பாவனையாக இருக்கலாம் அல்லது அது போன்ற பிற சமூகச் சீரழிவு நடவடிக்கையாக இருக்கலாம். அவற்றை நமது சமூகம் பொறுப்புணர்வோடு எதிர்கொள்ளவில்லை என்பதே உண்மை.

நமக்கேன் வீண் வம்பு என்று ஒதுங்கி நடப்பதுதான் அத்தகைய சீரழிவு நபர்களை மேலும் வீறுகொண்டெழுந்து சீரழிவைப் புரியத் தூண்டுகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படி ஒதுங்கி நடப்பதன் மூலம் சீரழிவுகளுக்கு நாம் வெற்றிலை வைக்கின்றோம் என்ற உண்மை நமது சமூகத்தின் ஒவ்வொரு பிரஜையின் மனதிலும் உறைக்க வேண்டும்.

தனித்தனியாக ஒவ்வொருவரும் தத்தமது பாதுகாப்பு, தன்னலன் என்று கருதி ஒதுங்கிச் சென்றால் ஒட்டுமொத்த சமூகத்தின் நலனுமே சந்தேகத்துக்குரியதாகிவிடுகிறது.

ஆகவே, சமூகச் சீரழழிவுக்கு எதிரான பேரெழுச்சி இயக்கம் ஒன்று நம் மத்தியில் கிளர்ந்தெழ வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது. பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதுதான் கேள்வி.

# சுதந்திரக் கட்சியை ஒன்றிணைக்க ஜனாதிபதி தயார் என்கிறார் தயாசிறி!



கொழும்பு, நவ.16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்றிணைக்கும் முயற்சியிலேயே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஈடுபட்டு இருக்கிறார் என விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்த வகையில் அர்ப்பணிப்புடன் செயற்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயாராக இருக்கிறார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூட்டு எதிர்க்கட்சியினருடன் தொடர்புபட்டு இருக்கிறார் என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அமைச்சரவை துணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டு எதிர்க்கட்சியுடன் உடன்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியிலேயே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தபோது தலைமைத்துவம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டதினால் கட்சியில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஓமந்தையில் யானைகள் அட்டகாசம்; தற்காலிக வீடு, பயன்தரு மரங்கள் சேதம்





வவுனியா - ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தினுள் புகுந்த யானைக் கூட்டத்தின் அட்டகாசத்தால் தற்காலிக வீடு சேதமடைந்துள்ளதுடன், சுமார் 30 தென்னை மரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் அண்மைக் காலமாக மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் யானைகளின் அட்டகாசத்தால் அப்பகுதி மக்கள் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக பல இடங்களில் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் யானை வேலி அமைக்கப்பட்ட போதிலும் இன்றும் பல கிராமங்கள் யானையின் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன.

இந்த நிலையில், அதிகாலை புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தினுள் வந்த யானைக் கூட்டமொன்று அங்கிருந்த தென்னந் தோட்டமொன்றினுள் புகுந்து காய்க்கும் பருவத்தில் இருந்த தென்னை மரங்களை அழித்துள்ளதுடன், பயன்தரு மரங்களைச் சேதப்படுத்தியுள்ளது.

இதேவேளை, அந்தப் பகுதியில் இருந்த தற்காலிக வீடொன்றின் சுவரைத் தாக்கி உடைத்துள்ள யானை, பல காணிகளினுள் இருந்த தென்னை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

தேங்காயின் விலையேற்றம் அதிகமாகவுள்ள நிலையில் தென்னை மரங்களை யானை அழிப்பது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டமையுடன், தமது கிராமத்திற்கு வரும் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (க-100)

# பிரிட்டன் தொண்டு நிறுவனத்தால் 543 பேருக்கு துவிச்சக்கர வண்டி !

யாழ்ப்பாணம், நவ.16

லண்டன் - இலங்கை மீள்குடியேற்றம் மற்றும் மறுமலர்ச்சி நிதியத்தின் ஏற்பாட்டில் லண்டனைச் சேர்ந்த தொண்டு நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு 543 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.




இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாக 143 துவிச்சக்கர வண்டிகள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பில் தொண்டு நிறுவனத்தின் அதிகாரி தெரிவிக்கையில்-

பிரிட்டன் மக்களால் பாவிக்காது கைவிடப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் சேகரிக்கப்படுகின்றன.

அவை பிரிட்டன் சிறைகளில் இருக்கும் தொழில்திறன் கொண்ட கைதிகளிடம் வழங்கப்பட்டு சீரமைக்கப்படுகின்றன.

அந்த துவிச்சக்கர வண்டிகளே யாழ்ப்பாணத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன எனத் தொண்டு நிறுவனத்தின் அதிகாரி தெரிவித்தார்.

## நாளை

17.11.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : சுவாதி மா. 6.13 வரை
திதி : சதுர்த்தசி பி.ப. 3.58 வரை

சுபநேரம் : 06.08 – 07.38 வரை
இராகுகாலம்: 13.38 – 12.08 வரை

# பெற்றோல் தட்டுப்பாட்டு ஏற்பட்டதற்கு கூட்டுத்தாபன அதிகாரிகளே காரணம்!

## விசாரணை அறிக்கையில் தகவல்

கொழும்பு, நவ. 16

அண்மையில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளே காரணம் என்று மூன்று அமைச்சர்களைக் கொண்ட விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாடு தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, சரத் அமுனுகம, அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோரைக் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரி நியமித்திருந்தார்.

இந்தக் குழு தமது அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் கையளித்தது.

இந்த அறிக்கையிலேயே, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு, வழக்கமாகப் பேணப்படும் எரிபொருள் கையிருப்பைப் பேணவில்லை என்றும், நெருக்கடி ஏற்படப் போவதை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'சராசரி நாள் ஒன்றில், இலங்கையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை கையிருப்பில் வைத்திருக்கும் வசதிகள் உள்ள போதிலும், நாளொன்றுக்கு சராசரியாக 2 ஆயிரம் மெட் றிக் தொன் எரிபொருளே தேவைப்படுகிறது.

நெருக்கடி வரவுள்ளதை யாரும் உயர்மட்டத்துக்கு தெரியப்படுத்தவில்லை. நெருக்கடி ஏற்படப் போவது, ஒக்ரோபர் 17ஆம் திகதியே பலர் அறிந்திருந்தனர். எனினும், அதனை எவரும் நிர்வாகத் துக்குத் தெரியப்படுத்தவில்லை.

இது ஒரு சதித் திட்டமாக இருக்கலாம் என்ற சந்தேகங்களை நிராகரிப்பதற்கில்லை.



இந்த நெருக்கடிக்குக் காரணமான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிய பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நான் 100 நாள் திட்டத்தில், அமைச்சராக இருந்த போது, எமது எரிபொருள் கையிருப்பு அளவை 60 ஆயிரம் மெற்றிக் தொன்னில் இருந்து 90 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரித்தேன்.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம், 15 ஆயிரம் தொன் எரிபொருளை சேமிக்கும் வசதி கொண்டது. மேலதிகமாக 8 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளைச் சேமிக்கும் வசதிகளும் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காணிகளின் விலைகள் கொழும்பில் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 16

அசையா சொத்துக்கள் பிரிவில் மேம்பாட்டை கண்காணிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியால் பல சுட்டெண்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கிய வகையில் காணிகள் தொடர்பான விலைச் சுட்டென் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுட்டெண்கள் தயாரிப்பில் மதிப்பீட்டுத் திணைக் களத்தால் வழங்கப்பட்ட 5 கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையிலான 50 பிரதேசங்களில் காணி விலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது காணி பயன்பாடு தொடர்பான விடயங்களை கவனத்தில் கொண்டு இருப்பிடம் அல்லாத வர்த்தகம் மற்றும் கைத்தொழில்துறை காணிகள் ஆகியன தொடர்பில் 3 சுட்டெண்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த 3 சுட்டெண்களில் பொதுவாக பயன்படுத்தப்படும் காணிகளின் விலைச் சுட்டெண் தயாரிக்கப்படக்கூடும்.

கொழும்பு மாவட்டத்தில் காணிகள் தொடர்பான விலை சமீபகாலத்தில் அதிகரித்துள்ளமையை வெளிப்படுத்தி காணிவிலைச்சுட்டெண் 2017ஆம் ஆண்டு ஜூன் மாத நடுப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் 402 உறுப்பினர்களை 468,476 வாக்காளர்கள் தெரிவு செய்யவுள்ளனர்!

கொழும்பு, நவ. 16

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், 402 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். மாநகர சபை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி என மூன்று நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகளுக்கும், மொத்தம் 402 உறுப்பினர்கள் இம்முறை தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களில் 243 உறுப்பினர்கள் வட்டார முறையில் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுவர். ஏனைய, 159 உறுப்பினர்கள், விகிதாசார முறைப்படி, தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இந்தத் தேர்தலில், வாக்களிப்பதற்கு, 4 லட்சத்து 68 ஆயிரத்து




476 வாக்காளர்கள் யாழ். மாவட்டத்தில் தகுதி பெற்றிருக்கின்றனர் என்றும் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமைச்சரவைக் கூட்டத்தில் அர்ஜூன மீது குற்றச்சாட்டு!



கொழும்பு, நவ. 16

தேவையான அளவு பெற்றோலை கையிருப்பில்வைத்திருக்காமையே நாட்டில் கடந்த வாரம் ஏற்பட்ட எரி பொருள் நெருக்கடி நிலைமைக்குக் காரணம் என நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது துறை சார்ந்த அமைச்சர் அர்ஜூன ரணதுங்கவின் மீது அமைச்சர்கள் பலரும் குற்றம்ஞ் சாட்டியுள்ளனர்.

பெற்றோல் தட்டுப்பாட்டுக்கான முழுமையான பொறுப்பை அர்ஜூன ரணதுங்க ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாடு தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்கவுள்ள நிலையில் அரசு தொடர்பில் மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த எரி பொருள் நெருக்கடி காணப்பட்டது.

இதனால், அரசிலுள்ள கட்சிகள் பலதும் தேர்தலில் வாக்குக் கேட்பதற்கு மக்களைச் சந்திக்க சங்கடப்படும் நிலைமைக்கு இந்தப் பெற்றோல் நெருக்கடி காரணமாக அமைந்துள்ளமையே அமைச்சர்களின் கோபத்துக்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# அரசாங்க ஊழியர்களின் சம்பளம் ஜனவரி முதல் 15 வீதம் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 16

2018 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைவாக அரச ஊழியர்களின் சம்பளம் ஜனவரி முதல் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் வரவு- செலவுத்திட்ட முன்மொழிவுக்கு அமைவாக அலுவலக உதவியாளர் முதல் சட்டமா அதிபர்வரை சம்பளம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படுகின்றது.

அரச ஊழியர்களின் இந்தச் சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறும் நபர்களுக்கான கொடுப்பனவுக்காக அரசு மேலதிகமாக 1200 கோடி ரூபாவை வருடாந்தம் செலவிட உள்ளது என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பின் நான்காம் நாள் விவாதத்தில் இதனை விவரித்தார்.

அரச துறையில் அலுவலக உதவியாளர்கள் தொடக்கம் ஆகக் கூடுதலாகச் சம்பளம் பெறும் சட்டமா அதிபர் வரையில் இந்த சம்பள அதிகரிப்பு இடம்பெறவுள்ளது.

இதற்கமைவாக அலுவலக ஊழியரின் அடிப்படைச் சம்பளம் 14 ஆயிரம் ரூபாவில் இருந்து 23 ஆயிரம் ரூபாவாகவும் , சட்டமா அதிபரின் சம்பளம் ஒரு லட்சத்து 10ஆயிரம் ரூபா வரையிலும் அதிகரிக்கப்படவுள்ளது.

விசேட வைத்தியர் ஒருவரின் அடிப்படை சம்பளம் 60 ஆயிரம் முதல் 69 ஆயிரத்து 756 ரூபா வரை அதிகரிக்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் அலுவலக உதவியாளரின் அடிப்படைச் சம்பளம் 17 ஆயிரத்து 450 ரூபாவாகும். 2017 ஆம் ஆண்டில் இவர்களது சம்பளம் 20 ஆயிரத்து 575 ரூபா ஆகும். 2018 ஆம் ஆண்டில் இவர்களது சம்பளம் 23 ஆயிரத்து 600 ஆகவும் அதிகரிக்கும்.

இந்த நடைமுறையின் கீழ் அலுவலக உதவியாளரின் சம்பளம் அடுத்த வருடத்தில் 3 ஆயிரத்து 75 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது.

சட்டமா அதிபரின் சம்பளம் 2018 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவாகவும் அமைந்திருக்கும் இவரது சம்பளம் 13 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளைநாவல் காட்டுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மணல் அகழ்வு அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளை மீறிச் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.அத்துடன் இரண்டு உழவு இயந்திரங்களையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றி மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மூதூர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மலையகம் போல் மாறிய மட்டக்களப்பு

மட்டக்களப்பு, நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் என்றும் இல்லாதவாறு நேற்றுக் காலை கூடுதலான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மட்டு மாவட்டம் எங்கும் மலையகம் போன்று காட்சியளித்துள்ளது.

பிரதேசம் எங்கும் பனிக்கூட்டம் காணப்பட்டதால் ஒருவரை ஒருவர் அடையாளம் காணமுடியாத வகையில் இருண்ட ஒரு பிரதேசமாகக் காட்சியளித்துள்ளது. இது மலைநாட்டில் நிலவும் காலநிலைக்கு ஒத்ததாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. வரலாற்றில் இவ்வாறானதோர் பனிப்பொழிவை சத்திக்கவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

பனியுடன்கூடிய காலநிலையானது காலை 8 மணிவரை நீடித்திருந்துள்ளது. இதன் காரணத்தால் மாணவர்கள், அரச ஊழியர்கள், விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் ஆகிய அனைத்து தரப்பினரும் பலத்த சிரமத்தை எதிர்நோக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)



# தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க தமிழ் கட்சிகள் ஒன்றிணைவு அவசியம்



வலியுறுத்துகிறார் தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் கட்சிச் செயலர்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க வேண்டுமானால் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தல்களை எதிர்கொள்ளவேண்டும் என்று தமிழ் மக்ள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்குமாகாணசபைஉறுப்பினருமான பி.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பில் அத்துருகிரியவில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் ரகு என்று அழைக்கப்படும் குமாரசாமி நந்தகோபனின் 9ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று நினைவுகூரப்பட்டது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இதன்போது, தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், அவ்வாறான கூட்டணிக்கு தமது கட்சி என்றும் தயாராகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பிள்ளையானைத் தோற்கடிக்க நினைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11ஆசனங்களுடன் 07ஆசனங்களைக் கொண்ட சமூகத்திடம் ஆட்சியைக் கொடுத்துக் கிழக்கு மாகாணத்தினை அடகு வைத்துவிட்டது. நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கும் வகையிலான முன்னெடுப்பை முன்னெடுத்துள்ளது. அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகள் முன்வைக்கப்படும்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி எந்த வகையிலாவது அதற்கான ஆதரவை வழங்கத் தயாராகவுள்ளது. 2018ஆம் ஆண்டு கிழக்கில் இரண்டு பெரிய தேர்தல்களை எதிர்கொள்ளும் நிலையுள்ளது. இந்தத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் எவ்வாறு தமது இருப்புக்களை நிலைநிறுத்திக் கொள்ளப்போகின்றார்கள் என்பதே இன்று கேள்விக் குறியாகவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து எந்தக் கட்சியும் வெளியேறுகின்றோம் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை எனக் கூட்டமைப்பு கூறுகின்றது. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் கட்சிகள் எவ்வாறான முன்னெடுப்புகளை முன்னெடுக்கவேண்டும், அவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை இங்குள்ள புத்திஜீவிகள் வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியைப் பொறுத்தவரையில் படகுச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதை புத்திஜீவிகளும் கட்சி ஆதரவாளர்களும் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் நீரிழிவு தின விழிப்புணர்வு ஊர்வலம்

நீரிழிவு தினத்தை முன்னிட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின்ஏற்பாட்டில்விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது.

ஊர்வலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எப்.பி.மதன் தலைமையில் நேற்று நடைபெற்றுள்ளது. இந்த விழிப் புணர்வுப் பேரணி வைத்தியசாலையில்இருந்து ஆரம்பமாகிவாழைச்சேனை மட்டக்களப்புப் பிரதான வீதி வழியாகச் சென்று மீண்டும் வைத்தியசாலையைச் சென்றடைந்துள்ளது.

இதன்போது பொதுமக்களுக்கு நீரிழிவு நோய் தாக்கம் மற்றும் நோயைக் குணப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பான வீதி நாடகம் வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் நடத்தப்பட் டதுடன், நோய் தொடர்பாக விழிப்புணர்வுப் பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன், நீரிழிவு நோய் தொடர்பான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்கு புதன்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்து நோயைகக் குணப்படுத்த முடியுமென வைத்திய அத்தியட்சகர் எப்.பி.மதன் குறிப்பிட்டுள்ளார்.

இதில் வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை இந்துக்கல்லூரி மற்றும் ஓட்டமாவடி மத்திய கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## தகவல் அறியும் உரிமையை தெளிவூட்டும் மாநாடு

தகவல் அறியும் உரிமை, மற்றும் அமுல்படுத்தல் தொடர்பில் பொதுமக்களைத் தெளிவூட்டும் மாநாடு மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த மாநாடு மட்டக்களப்புக் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

மாற்றுக் கொள்கை நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகேயின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா கலந்து கொண்டு கருத்துக்களையும், விளக்கங்களையும் வழங்கினார்.

இதன்போது தகவல் உரிமைகள் பற்றிய கையேடுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இதில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் அங்கத்தவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# விஜேவீர கொலைக்கு பொறுப்பேற்கும் துணிச்சல் யாருக்கும் இல்லை என்று கூறுகிறார் லால்காந்த!

கொழும்பு, நவ. 16

றோகண விஜேவீரவை தான் கொலை செய்யவில்லை என்று மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தன்னிடம் கூறினார் என ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் நிறுவகத் தலைவர் றோகண விஜேவீர நினைவு நாளை முன்னிட்டு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முற்போக்கு இலங்கையர்கள் எவரும் நவம்பர் 13 ஆம் திகதியை மறக்கமாட்டார்கள். எமது நிறுவகத் தலைவர் றோகண விஜேவீர அன்று தான் கொல்லப்பட்டார். அப்போதைய ஆட்சியாளர்களால், ஆயிரக்கணக்கானவர்கள் அப்போது கொல்லப்பட்டனர். 60 ஆயிரத்துக்கு அதிகமான ஜே.வி.பியினர் கொல்லப்பட்டனர் என நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் இல்லாமல் அழித்தவர்கள் தாங்களே என்று பலர் இப்போது உரிமைகொண்டாடுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ, தானே போருக்குத் தலைமை தாங்கியதாக கூறுகிறார். விடுதலைப் புலிகளுக்கு முடிவு கட்டியது தானே என்று கோத்தாபய ராஜபக்ஷ கூறுகிறார். தானே அதனைச் செய்தேன் எனச் சொல்கிறார் சரத் பொன்சேகா. வெற்றிக்கு உரிமை கோரி இன்னும் பலர் நூல்களை எழுதியுள்ளனர்.

1980 களின் இறுதியில் ஆயிரக்கணக்கான ஜே.வி.பியினர் கொல்லப்பட்டனர். ஆனால், எவரும் அதற்குப் பொறுப்பேற்கவில்லை.

ஏனென்றால், நாங்கள் முற்போக்கான இயக்கமாக முன்நோக்கிச் செல்கிறோம்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா போட்டியிட்டிருந்தார். எமது கட்சியின் பரப்புரைக்கு நான் அப்போது தலைமை தாங்கியிருந்தேன். பரப்புரையின் போது, ஜனக பெரேரா தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு, என்னைச் சந்திக்க முடியுமா என்று கேட்டார்.

அதையடுத்து அவருடன் நடந்த சந்திப்பின் போது, தான் றோகண விஜேவீரவைக் கொலை செய்யவில்லை என்று கூறினார். அவரது கொலையில் தனக்குத் தொடர்பில்லை என்று தெரிவித்தார்.

விஜேவீரவை கைது செய்தமை மட்டுமே தான் என்றும், அவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தான் ஒப்படைத்து விட்டேன் என அவர் கூறினார்.

இந்த விடயத்தில் தனது பெயர் சம்பந்தப்பட்டமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், கூறிய அவர், அந்தக் குற்றத்துக்குக் காரணமான தனது அரசியல் அல்லது இராணுவ தலைவர்களைக் காட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

அந்த துரதிஷ்டமான நாளில் எங்களுடன் போராட்டத்தில் இருந்த பலர் இங்கு இருக்கிறார்கள். நான் வெலிக்கடை சிறையின் வதைக்கூடத்தில் இருந்தேன். ரில்வின் சில்வா மகஸின் சிறையில் இருந்தார். எமக்கு அரச நாளிதழ்கள் மாத்திரம் தரப்படும்.

அதில் அப்போது உபதிஸ்ஸ கமநாயக்க கைது செய்யப்பட்டார் என தலைப்புச் செய்தி வெளியாகியிருந்தது. அந்த நாளிதழ்களை வீசிய சிறை அதி



காரிகள், போராட்டம் முடிந்து விட்டது, எல்லாவற்றையும் விட்டு விடுங்கள் என்று எம்மிடம் கூறினார்.

1980 களின் இறுதியில் நடந்த கொலைகள் கடத்தல்கள் பற்றியும் தான் பலர் பேசுகின்றனர். ஆனால், 1985 இலேயே ஜே.வி.பி. உறுப்பினர்களின் படுகொலைகள் ஆரம்பமாகி விட்டன. அனுராதபுரத்தில் எமது இரு தோழர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

புறக்கோட்டையில் இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு எதிராக போராட்டம் நடத்திய எமது உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர். அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்கவும், தினேஸ் குணவர்த்தனவும் எம்முடன் இருந்தனர். ஜே.ஆர். அரசு துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டது.

இன்று ரதுபஸ்வெல துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. 1987 இல் இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு எதிரான போராட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு குறித்து எப்போது விசாரணை நடத்தப்படும்?

முதலாளித்துவ அரசுகள் எம் தலைவரையும், எல்லா மத்திய குழு உறுப்பினர்களையும் 60 ஆயிரம் உறுப்பினர்களையும் கொன்றழித்து விட்டன. அந்தக் கொலைகள் எமக்கு ஒரு தந்திரோபாய பின்னடைவை ஏற்படுத்தின. ஆனால், நாம் இழந்து போகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சபாநாயகரைச் சந்தித்தார் கடற்படைத் தளபதி!



கொழும்பு, நவ. 16

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க சபாநாயகர் கரு ஜயசூரியவை சந்தித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது இலங்கை கடற்படையின் புதிய கடற்படைத் தளபதியாக கடமையேற்றுள்ள வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரண சிங்கவிற்கு தனது வாழ்த்துக்களை சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், இந்த நிகழ்வு நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

## பேராசிரியர் குணபால மலலசேகரவின் ஞாபகார்த்த நிகழ்வு ஜனாதிபதி தலைமையில்!

கொழும்பு, நவ. 16

காலஞ்சென்ற பேராசிரியர் குணபால மலலசேகரவின் ஞாபகார்த்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில் குணபால மலலசேகரவின் வாழ்க்கை வரலாறு தற்போதைய தூதுவர்கள் உள்ளிட்ட தூதுவராலயங்களின் உறுப்பினர்களுக்கு சிறந்தவொரு முன்னுதாரணமாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்கவின் மத்தியஸ்த வெளிநாட்டுக் கொள்கையை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் குணபால மலலசேக்கரவின் அர்ப் பணிப்பை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

தேசத்தின் கௌரவத்தை சர்வதேசத்திற்கு கொண்டு சென்ற மலலசேகர, நாட்டிற்கு கீர்த்தியைப் பெற்றுக் கொடுத்த ஈடிணையற்ற கல்விமான் ஆவார்.

1957ஆம் ஆண்டில் வெளிநாட்டு தூதரக சேவையில் நியமிக்கப்பட்ட குணபால மலலசேகர, அதன்பின்னர் உலக பௌத்த மகா சம்மேளனத்தின் முதலாவது தலைவராகவும் யுனெஸ்கோ அமைப்பின் லும்பினி மறுசீரமைப்பு குழுவின் தலைவராகவும் செயற்பட்டார்.

உலகளாவிய மற்றும் பிராந்திய சம்மேளனங்கள் பலவற்றிலும் அங்கம்வகித்த மலலசேகர, உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களில் உறுப்புரிமையைக் கொண்டிருந்தமையுடன் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றி நாட்டிற்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

குணபால மலலசேகரவின் செயற்பணியைப் பாராட்டியதுடன் மலலசேக்கரவின் உருவச்சிலைக்கு ஜனாதிபதி மலர்மாலை அணிவித்து



அஞ்சலி செலுத்தினார்.

அதன்பின்னர் குணபால மலலசேகரவின் வாழ்க்கை வரலாறு உள்ளடங்கிய ‘பேராசிரியர் குணபால மலலசேகர - மறுமலர்ச்சியின் முன்னோடி’ எனும் நூல் குணபால மலலசேகர அமைப்பின் தலைவர் விஜய மலலசேகரவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஸியாமோ பாலி மகா நிக்காயவின் கோட்டே ஸ்ரீ கல்யாணி தர்ம மகா சங்கச் சபையின் அனு நாயக்கர் பேராசியர் வண.கொட்ட பிட்டியே ராகுல தேரர், பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதி ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் பெல்லன்வில விமலரத்தன தேரர், பேராசிரியர் வண. அகலகட சிறிசுமண தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் அமைச்சர்கள் கலாநிதி சரத் அமுனுகம, அனுர பிரியதர் ஷன யாப்பா, காமினி ஜயவிக் ரம பெரேரா ஆகியோரும் புத்திஜீவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் வெலிசறை சிறைச்சாலை வைத்தியசாலையில்!

கொழும்பு, நவ. 16

முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண் டர் டீ.கே.பி.தசநாயக வெலிசறை சிறைச்சாலை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவரின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கி யுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு வெள்ளை வான் பயன்படுத்தி 11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் செய்தமை தொடர் பில் முன்னாள் கடற்படைக் ஊடகப் பேச்சாளர் டீ.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட 6 கடற்படை அதிகாரிகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

## தினசரி ராசி பலன் 16.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் முதலாம் நாள் வியாழக்கிழமை. திரயோதசி திதி பகல் 2.09 மணிவரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் சித்திரை பகல் 3.17 மணிவரை பின்னர் சுவாதி. சித்தாமிர்த யோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 1.22 மணிமுதல் 2.49 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 7.43 மணிமுதல் 9.13 மணிவரை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சித்திரை.*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொரு ளாதாரம் மத்திமமாகக் காணப்படும். செலவுகள் அதி கரிக்கும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**ரிஷபம்:** யோகமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். வியாபாரத்தில் வரவு உண்டாகும். வீடு, காணி வாங்கும் யோகம் சிலருக்கு உள்ளது. பெண்க ளுக்கு திடீர்த் திருமணயோகம் உண்டாகும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு சரளமாக இருக்கும். குடும்ப உறவு பலப்படும். கடன் பிரச்சினைகள் கட்டுப்படும். வியாபாரத்தில் மறை முக எதிர்ப்புகளைத் தாண்டி இலாபம் சம்பாதிப்பார்கள்.

**கடகம்:** அலைச்சல் மிகுந்தநாள். பணவரவு குறை யும். கடன் தேடி அலைவார்கள். சிலர் உபாதைகளால் மருத்துவ உதவியை நாடுவார்கள். சிலர் அரசாங்க வேலை தேடி அலைவார்கள்.

**சிம்மம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வரு மானம் சுமாராக இருக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. வீண் அலைச்சல்கள் உண்டா கும்.

**கன்னி:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். நீண்ட நாள்களாகப் பயணிக்க நினைத்த உறவினர்கள் சந்திப்பார்கள். தொழில் முன்னேற்றம் உண்டாகும்

**துலாம்:** அதிஷ்டமான நாள். பண பலம் அதிகரிக் கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும்.தாய் வழிச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும் . குடும்பத்தில் குழப்பம் உண்ணடாகும். தொழிலில் அலைச்சல்கள் உண்டாகும்.

**தனுசு:** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியா பாரம் பன்மடங்கு பெருகும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன.வரவும் செலவும் சரிசமனாக இருக்கும்.எடுக்கும் முயற்சி கள் தடை. வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும்

**கும்பம்:** சுபீட்சமான நாள். பணப் புழக்கம் தாராளமாக இருக்கும்.வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வீடு வாகன வசதி கள் சேரும்.

**மீனம்:** துயரமான நாள்.வரவேண்டிய பணம் தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.கொடுக்கல் வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4ஆம் பாதம் ,உத்தரட்டாதி ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று சுபகருமங் களைத் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்

## சர்வதேச புலனாய்வு அதிகாரிகளின் கருத்தரங்கு அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது!

கொழும்பு, நவ. 16

சர்வதேசப் பொலிஸின் (இன்ரபோல்) புலனாய்வு அதிகாரிகளுக்கான கருத் தரங்கு ஒன்று அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள் ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர இதனைத் தெரி வித்துள்ளார்.

கொழும்பு பொலிஸ் தலை மையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

இலங்கையின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. ஐ.நா. சர்வ தேசப் பொலிஸ் மற்றும் பாது காப்பு அமைப்புகள் இதனை அங்கீகரித்துள்ளன.

இலங்கையில் தீவிரவாதம், வகுப்புவாதம், ஐ.எஸ். மற் றும் பிரிவினைவாதம் உள் ளிட்ட எந்தவோர், அடிப் படைவாதமும் இலங்கையில் இல்லை என்பதைச் சர்வதேச பொலிஸும்,சர்வதேச அமைப்பு களும் ஏற்றுக்கொண்டுள்ளன.

அதனால், அவர்கள் பாது காப்புக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளை நடத்து வதற்கு இலங்கையை பயன் படுத்த திட்டமிட்டுள்ளனர்.

அண்மையில் சர்வதேச பொலிஸின் ஒழுங்கமைப்பில் பல முக்கியமான பாதுகாப்பு கருத்தரங்குகள் இலங்கையில் நடத்தப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் இன்னும் பல கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன.

தெற்கு மற்றும் தென்கிழக் காசிய நாடுகளில் மனித கடத்தலுக்கு எதிரான கருத் தரங்கு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இதுபோல, சர்வதேச பொலிஸின் புலனாய்வு அதி காரிகளுக்கான கருத்தரங்கு ஒன்று அடுத்த வாரம் கொழும் பில் நடைபெறவுள்ளது.

சர்வதேச அளவிலான மோச மான போதைப்பொருள் மற் றும் மனித கடத்தல், இணை யக் குற்றங்கள் இலங்கையில் அண்மைக் காலங்களில் பதி வாகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்களின் முறைப்பாடுகளை ஆராய முல்லையில் விசேட கலந்துரையாடல்!

முல்லைத்தீவு, நவ. 16

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வடமாகாண ஆளு நரிடம் கொண்டு சென்ற முறைப்பாடுகளை ஆராயும் விசேட நடமாடும் சேவை ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.



முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத் தில் வடக்குமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலை மையில் நேற்றுமுன்தினம் இந்தக் கலந்துரையாடல் நடை பெற்றது.

இதன்போது வடமாகாண ஆளுநரிடம் கொண்டு சென்ற முறைப்பாடுகள் சம்மந்தப் பட்டஅதிகாரிகள் முன்னிலை யில் ஆராயப்பட்டது.

இதன் இறுதியில் ஊடகங்க ளுக்கு கருத்து வெளியிடும் போது வடக்குமாகாண ஆளுநர் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்ட மக் களால் என்னிடம் கொண்டு வரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு மாவட்ட அரச அதிபர் உள் ளிட்ட பிரதிநிதிகள் அனை வரையும் அழைத்து மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தோம்.

இதில் காணிப்பிரச்சினை, குடிதண்ணீர் பிரச்சினை, கல்வி பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகள் எட்டப் பட்டன.

அத்துடன், அடுத்த ஆண்டி லேயே வடமாகாணத்துக்கு வரவு -செலவுத் திட்டத்தில் பல்வேறு நன்மைகள் கிடைக் கிறது எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரது செயலாளர், முல் லைத்தீவு மாவட்ட செயலா ளர், மாகாண காணி ஆணை யாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகா ரிகள், புதுக்குடியிருப்பு, கரை துறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, மணலாறு ஆகிய பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள், அமைச்சுக் களின் செயலாளர்கள், கல் வித் திணைக்கள அதிகாரிகள் முறைப்பாடுகளைச் செய்த மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் குழுக்களிடையே மோதல்!

யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக 4 பேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

நேற்றுமுன்தினம் கல்லூரி வளாகத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொழி நுட்பக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் பிரியா விடை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு முடிவடைந்து மாணவர்கள் வெளியில் வந்த வேளை இரு மாணவர்களி டையே மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோத லில் மாணவன் ஒருவரை பிறிதொரு கற்கை நெறி மாணவன் தலைக் கவசத்தால் தாக்கியுள் ளார்.

இதனையடுத்து இரண்டு மாணவர்களுக் கிடையே ஏற்பட்ட மோதலை தடுத்துத் தாக் கிய மாணவனை ஏனைய மாணவர்கள் சமா தானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிலையில், சிறிது நேரத்தில் அந்த மாணவன் மேலும் சுமார் பத்துக்கும் மேற்பட்ட தனது கற்கைநெறி மாணவர்களை அழைத்து வந்து மற்றைய கற்கைநெறி மாணவர்கள் மீது தலைக்கவசம் தடிகள் கம்பிகள் உள்ளிட்ட வைகளால் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனையடுத்து அங்கு வந்த விரிவுரையா ளர்கள் மற்றும் ஏனைய மாணவர்கள் தாக்கிய மாணவர்களை மேலும் தாக்காது தடுத்தனர். எனினும் தாக்கியவர்கள் நீங்கள் வெளியில் வாருங்கள் வெட்டுறோம் என மிரட்டி தொழி நுட்பக் கல்லூரி வளாகத்தை விட்டு வெளி யேறினார்கள் எனப் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் துஷாந் எனும் மாணவன் தலைக்கவசத்தால் மிக மோச மாகத் தக்கப்பட்டுப் படுகாயம் அடைந்துள்ளார். அத்துடன் மேலும் 10 மாணவர்கள் காயம டைந்துள்ளனர். காயமடைந்த மாணவர்களில் 4 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நல்லிணக்கத்துக்கு முதலில் சகிப்புத் தன்மையே அவசியம்

**சகிப்புத்தன்மை வளர்ப்போம், சகோதரத்துவத்தில் சகவாழ்வு நிலைநாட்டுவோம் (for16.11.2017)**

காலம் பூமியின் கரைகளில் பூக்கோலம்போட்டுக்கொண்டிருந்தாலும் விஞ்ஞானத்தின் வியப்புக்கள், அறிவியலின் ஆக்கப் பணிகள், இயற்கையின் எழுச்சிகள், காலத்தின் சூழற்சிகள், மனிதனின் வளர்ச்சிகள் மற்றும் மனித உள்ளங்களின் புரட்சிகள், இன்று உலகளாவிய ரீதியில் புகட்டும் பாடங்களும், படைக்கும் சாதனைகளும் அளப்பரியனவாகி வருகின்றமையை நாம் அன்றாடம் கண்டனுபவிக்கின்றோம். எமது பகுதிகளை எடுத்து நோக்கினால் முள்வேலிகளும் ஆமி அரண்களும் அகற்றப்பட்டு விட்டன. 'காப்பெற்' வீதிகளும் கம்பனிகளும் வந்துவிட்டன. ஆயினும் ஏதே ஒன்று குறைவதை நாம் உணர்கின்றோம்.

மனிதமுன்னேற்றத்தின் உயர் நிலைக் காலமாகக் கருதப்படும் இந்த நவீன காலத்தில், உலக வலைப்பின்னலில் கணினியூடாக கண்டதையும் கண்டுகொள்ளும் யுகத்தில், மனிதன் வீறுநடைபோட்டுக் கொண்டிருக்க, எங்கும் அநீதிகள் அரங்கேறுகின்றன. சாவுகள் சரித்திரமாகின்றன. மனித மாண்பியல் வீழ்ச்சியடைகின்றன. இதற்கெல்லாம் என்ன காரணம் என்று நோக்கினால் சகிப்புத்தன்மை எம்மை விட்டு விலகிச்சென்று விட்டதே என்றுதான் ஆணித்தரமாகக் கூறவேண்டும்.

சகிப்புத்தன்மை ஏன் எமக்கு அவசியம் என விடைதேடினால் பல காரணங்களைக் கண்டுபிடிக்கலாம். நாம் வாழும் இந்த உலகம் நமக்காக படைக்கப்பட்டதல்ல. படைக்கப்பட்ட உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனாலேதான் எமக்குப்பிடிக்காத பல காரியங்கள், நிகழ்வுகள் அவ்வப்போது நடந்துகொண்டிருக்கின்றன. நாம் கூடிவாழும் சமுதாயத்தில், உரிமைகளை கட்டிக்காத்துப்பேணுவது மிகவும் முக்கியமானதாகும். எமது உரிமைகள் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் மற்றவர்கள் உரிமைகளும் மிகவும் முக்கியம். அப்படி எங்கள் சலுகைகள் பறிக்கப்பட்டால், சகிப்புத் தன்மையுடன் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை நாம் உருவாக்கவேண்டும்.

கருத்துச்சொல்லும் சுதந்திரம் என்பது நாங்கள் விரும்புகின்றமையை மற்றவர்கள் சொல்ல அவர்களுக்கு கொடுக்கும் உரிமை அல்ல.- இதைத்தான் உலகின் சர்வாதிகாரிகளும் நிறுவனங்களில் மனித முகாமைத்துவம் தெரியாத அதிகாரிகள் பலரும் செய்கின்றனர் - எங்களுக்கு விருப்பமில்லாத கருத்து சொல்லப்படும்போது, அதை வெளிப்படுத்த நாங்கள் அளிக்கும் சுதந்திரம் தான். கருத்துச் சுதந்திரத்தில் ஒன்றிய விடயம்தான் சகிப்புத்தன்மை. எங்களுக்கு அந்தச் சகிப்புத்தன்மை இல்லாவிட்டால், எதிர்த்துக் கருத்துக்கூறிய வரை தாக்கவேநாம் முனைவோம். இங்கே நாம் எல்லா சுதந்திரங்களையும் ஆதரிக்கின்றோம் என்றுசொல்லிக் கொண்டு, எதிர்க்கருத்துச் சொல்லப்படும்போது, பொங்கியெழுபவராக மாறுவோம்.எனவேசகிப்புத்தன்மையை வளர்த்து நாகரிகமானவர்களாக நடமாட வேண்டும்.

**சர்வதேச சகிப்புத்தன்மை நாள்**

கல்வி, அறிவியல், பண்பாட்டு மற்றும் கலாசாரம் ஆகியவற்றை வளர்க்க, ஐ.நாவின் ஓர் அங்கமான யுனெஸ்கோ நிறுவனம் 1945ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் 50ஆம் ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் முகமாக, வருங்காலத் தலைமுறையினரை கருத்தில் கொண்டு, அகில உலக சகிப்புத்தன்மை நாள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் 1995ஆம் ஆண்டு ஐ.நா. பொது அவையில் நிறைவேற்றப்பட்டது. மனிதகுலம் அறிவுபூர்வமாகவும் நன்னெறியின் வழியிலும் ஒன்றிணைய வேண்டும் என்பதற்காக இந்த உறுதிமொழியின்படி 1996ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 16ஆம் திகதி சர்வதேச சகிப்புத்தன்மை நாளாக ( International Day for Tolerance) கடைப்பிடிக்கப்படுகின்றது. இன்றைய மக்களிடையே சகிப்புத் தன்மை இல்லாதமையால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்ப டுத்தும் வகையிலும், அகிம்சை, சகிப்புத்தன்மையின் அவசியத்தையும் இந்நாள் வலியுறுத்துகிறது. அனைவரும் வாழ்வதற்குத் தேவையான அன்பு- பரிவு-ஒற்றுமை ஆகிய பல உயர்ந்த குணங்களுக்கு அடிப்படையாக சகிப்புத் தன்மை இருக்கவேண்டும் என்பதை இந்நாள் எமக்கு வலியுறுத்துகின்றது. ஒவ்வொருவரும் மற்றவரின் அடிப்படை உரிமை, கருத்துகள், சுதந்திரம், கலாசாரம், மதநம்பிக்கை போன்றவற்றை அங்கீகரிக்கவும் மதிக்கவும் வேண்டும் என்பதை இந்நாள் வலியுறுத்துகிறது.

**சகிப்புத்தன்மை இருக்கும் இடம்**

இன்று சகோதரத்துவம், சமத்துவம், சகவாழ்வு, உடன்ஒத்துவாழுதல், மீளிணக்கம் என்ற உணர்வுப் பரிமாணம் எம்மண்ணிலே மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டுபோவதை நாம் உணர்வோம். இதனால் மூடி மறைத்துவிட முடியாத கேவலமான நிகழ்ச்சிகள் உதயமாகிக் கொண்டுதான் இருக்கின்றன. நாம் எங்களுக்குள் சகிப்புத்தன்மையை வளர்க்காதமையால் விழைவால் இன்று மண்ணிலே அரங்கேறும் இந்த அசிங்கங்களின்: -

பெரும்பான்மையினத்தினர் பெருவாரியாக வாழும் பிரதேசங்களில் இந்துக் கோயில்கள் இடித்து நொறுக்கப்படல். இஸ்லாம் சமய பள்ளிவாசல்கள் இடித்து நொறுக் கப்படல். பௌத்த துறவிகளின் அநாகரிகச் செயற்பாடுகள் அத்துடன் இன்னும் திரைமறைவில் அரங்கேறும் கருக்கலைப்புக்கள் விடுதிகளில் நடத்தப்படும் விபசார செயற்பாடுகள், வீதிகளில் அரங்கேறும் விஷமிகளின் வீண்சேட்டைகள், தொகுதிகளிலே நடைபெறும் இளைஞர்களின் கோஷ்டி மோதல்கள், அடிக்கடி முளைக்கும் கஞ்சா கடைகள், போதைப்பொருள்களின் விற்பனைகள், மதுவிற்கும் மாது விற்கும் மண்டியிடும் மாணவர்களின் வாழ்வு, இன்ரநெற், உலக வலைப்பின்னலில் விழுந்து அழுகும் மனித மீன்கள்-பட்டியல்கள் நீண்டுகொண்டே போகின்றன.

இதற்கெல்லாம் ஒரு காரணம் சகிப்புத்தன்மை எங்கிருந்தோ வருகின்றது என நாம் ஊகித்துக் கொள்வதாகும். சகிப்புத் தன்மையின் வேர்கள் நம்மை தவிர வேறிடத்திலோ, வேறொருவரிலோ இருக்கின்றது என நினைத்து அவற்றைச் சரி செய்ய முயற்சிப்பதே. இதனால் நாம் எல்லோரும் தேடும் சகிப்புத்தன்மை இன்னும் எம்மிலிருந்து விலகிப் போகிறது.

**சகிப்புத்தன்மை என்பது**

ஒரு மனிதன் சக மனிதனை மதித்தல், அவனின் உரிமைகள், சுதந்திரத்தை மதித்தல், ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மொழி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்து அவர்களின் உரிமைகளில் தலையிடாமல் இருப்பது சகிப்புத்தன்மை என நாம் விளக்கம் கொள்ளலாம். சகிப்புத்தன்மை என்பது சாதி, மத, இன, மொழி உணர்வுகளால் வரும் பற்று அல்ல, மாறாக அது ஒவ்வொருவரின் மனதிலிருந்து எழும் வாழ்வியல் நெறி. அந்த உணர்வை எந்த ஒரு சமூக நம்பிக்கைகளாலும், நிறுவனங்களாலும், அரசாலும் உருவாக்க முடியாது. நாம் இலங்கை ஒரு சமயச் சார்பற்ற சகிப்புத்தன்மை கொண்ட நாடு எனக் கருதுகின்றோம். ஆனால், சமயச் சார்பற்ற மற்றும் சகிப்புத்தன்மையுடைய பார்வை என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட வர்களுக்கு மட்டுமே தேவை என்ற பார்வை இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இலங்கையில் வாழும் அனைவரும் தம்மகத்தே வளர்த்தெடுக் வேண்டிய முக்கிய உணர்வு சகிப்புத் தன்மை.



ஆக்கம்: செல்வி சுபாஜினி குணரட்ணம், ஆசிரியர், யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

ஏற்றத்தாழ்வு, துன்பமும், துயரமும் நிறைந்ததவையாக இந்த உலகம் இருக்கிறது. அச்சமும், வெறுப்பும், சந்தேகமும், நம்பிக்கையற்ற தன்மையும் மனித மனங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. இதற்கான காரணம் இளைஞர்கள் மத்தியில் இருக்கும் சகிப்புத்தன்மை அற்ற ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, மனித சமூகத்தை, நாகரிகப் பாதைக்கு அழைத்து வந்த பல நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள், இன்று மனிதர்களிடையே சரிசெய்ய இயலாத பிரிவினைகளை உண்டாக்கி வருகிறது. ஆற்றல் மிகு அறிவியல் கண்டுபிடிப்புகள், ''நான்தான் பெரியவன்'' என்ற மனோபாவத்தை உலக நாடுகளிடையே உருவாக்கியுள்ளது. இவை மனித சமூகங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியுள்ளது.

சகிப்புத்தன்மை இல்லை என்ற குரல் உலகம் முழுவதும் இன, மொழி, சமய வேறுபாடின்றி ஒலித்துக்கொண்டு இருக்கிறது. மனித நாகரிகத்தின் முன்னோடிகள் என தங்களைச் சொல்லிக் கொள்ளும் ஐரோப்பியரும், அமெரிக்கரும், கடந்த நூற்றாண்டு வரை வெள்ளையர்களே உலகில் சிறந்தவர்கள், ஆங்கிலமே சிறந்த மொழி என்ற கருத்துக்களைக் கொண்டிருந்தனர். அவர்களின் காலனியாதிக்க செயற்பாடுகள், உலகின் மக்களிடையே ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை அதிகரிக்கச்செய்தது. அவை மக்கள் மனங்களிலிருந்து சகிப்புத்தன்மை என்ற நற்குணத்தை சாய்த்துவிட்டது. தெளிவான ஆன்மிக உணர்வு, மக்களிடம் காட்டும் மனித நேயம், நேச மனப்பான்மை, சகிப்புத் தன்மை ஆகியன அழிந்துபோகின்றமையே இதற்குக் காரணமாகும் எனலாம்.

சகிப்புத்தன்மை அற்றவர்களின் தேர்வு வன்முறை வழியே. நாம் வன்முறை என்னும் வாள் முனையில், எவருடனும் நல்லுறவு பேண இயலாது. யாருக்கும் நல்வாழ்க்கையை வழங்க இயலாது. எவரிடம் விமர்சனங்களை தாங்கிக் கொள்ளும் சக்தி இருக்கிறதோ, அவரே சகிப்புத்தன்மையுடையவர். எவர் தன்மீதான விமர்சனங்களுக்கு அறவழியிலேயே விளக்கங்களை தருகிறாரோ அவரே சகிப்புத்தன்மையுடையவர். தன் தவறுகளை பிறர் சுட்டிக் காட்டும் போது, பொறுமையுடனும் பகுத்தறிவுடனும் அதைச் சரிசெய்ய முயல்கிறாரோ அவரே சகிப்புத்தன்மையுடையவர் எனலாம்.

**சகிப்புத்தன்மையை வளர்க்க வேண்டிய பணி**

சகிப்புத்தன்மையை வளர்க்க வேண்டியது எமது கடமையாகும். உலகில் சண்டை, சச்சரவுகள் நிறைந்து காணப்படுகின்றன. இன, மத சச்சரவுகள், வகுப்பு வாதங்கள்- பூசல்கள் ஆகியவற்றை இல்லை என மறுக்கவோ அல்லது அலட்சியப்படுத்தவோ முடியாது. ஆனால் இவற்றுக்கான தீர்வை சமாதான முறையில், சகிப்புத்தன்மை உணர்வுடன் நாம்தான் காணவேண்டும். உலக அளவில் சமாதானத்தின் அவசியம் உணரப்பட்டால்தான் சகிப்புத் தன்மை வளரும். இதற்கான முயற்சி சாதி, மத, இன பேதமின்றி அனைவரிடத்திலிருந்தும் தொடங்கப்பட வேண்டும்.

**சமயங்களில் சகிப்புத்தன்மையின் பார்வைகள்**

சமயங்கள் என்பது தீவுகள் போன்றன. அன்பு, சகிப்புத்தன்மை போன்ற நற்குணங்களால் அவற்றை இணைத்தால் மதமின்றி ஒற்றுமையுருவாகி அமைதி எமக்குள் நிலவும். ''மத உணர்வு ஆன்மிக உணர்வாக மலர வேண்டும்.'' என்று மறைந்த இந்தியாவின் ஜனாதிபதி - மாமேதை அப்துல் கலாமின் வரிகளை, சகிப்புத்தன்மையை விரும்புவோருக்கு கூறுகின்றமை நல்லது. மக்கள் மனங்களிலிருந்து வெறுப்பைத்துடைத்தெறிவதே சகிப்புத்தன்மை விரும்புவோரின் முக்கியபணி என உணரவேண்டும். பல்வேறு சமயங்கள், மொழிகள், இனங்கள் பிராந்தியங்கள் ஆகிய எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் மனித நேய உணர்வுகளை நமது குழந்தைகளுக்கு போதிப்பதன் மூலம் சகிப்புத்தன்மையை வளர்க்கமுடியும்.

புத்தரின் பாதையை பின்பற்றும் பலர் வாழும் நம் நாட்டு, சகிப்புத் தன்மை என்ற மேலான நெறியை பின்பற்றவேண்டும். பொறுமையும் சகிப்புத்தன்மையும் நிம்மதிக்கான படிக்கட்டுகள் என்பதை மறந்துவிடலாகாது. சகிப்புத்தன்மை குறைவாக இருப்பதால்தான் வாழ்வின் முக்கியமான முடிவுகளை வேகமாக எடுக்கின்றோம். அப்போது ஆணவம் நம்மைச் சூழ்ந்துகொள்கின்றன. பின்னர் கவலை மேகங்கள் எம்மில் கருக்கட்ட அவை நிம்மதியைப் பறித்துவிடுகின்றன.இன்று கணவனுக்கும் மனைவிக்கு மிடையே சகிப்புத்தன்மை குறைகின்றமையால் மணவிலக்குகள் அதிகரிக்கின்றன. நாமும் தவறிழைக்கிறோம். ஆயினும் பிறர் தவறைச் சகித்துக்கொள்ளத் தயாரில்லை அதற்கு வாக்குவாதத்திலும் சண்டையிலும் இறங்குகின்றோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




புதுடில்லியில் நடந்த ஒரு செய்தியாளர் மாநாட்டில் ரில்லர்சன் பேசுகையில், இந்தியாவும் அமெரிக்காவும் இயல்பான கூட்டாளிகளாக, பாதுகாப்பு மற்றும் பொருளாதார கூட்டுக்களை வளர்த்துக் கொண்டே பயங்கரவாதத்திற்கு எதிராக தோளோடு தோள் கொடுத்து நிற்கின்றன எனத் தெரிவித்தார்.

இந்தப் பிராந்தியம் முழுவதிலுமான வோஷிங்டனின் நலன்களை அழுத்தமாக முன்னெடுப்பதற்காக இந்தியாவை ஒரு தாக்குதல் நாடாக வளர்க்கும் அமெ ரிக்க மூலோபாயத்தை ரில்லர்சன் சூசகமாகக் குறிப்பிட்டு, இந்தியா ஒரு முன்னணி சக்தியாக எழுச்சியடைவதற்கு தனது ஆதரவை தெரிவித்தார். மேலும், இந்தப் பிராந்தியம் முழுவதிலும் பாதுகாப்பை வழங்குவதற்கான இந்திய திறன்களுக்குத் தொடர்ந்து பங்களிப்பு செய்ய’’ ட்ரம்ப் நிர்வாகம் அதனை அர்ப்பணித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்த திட்ட நிரல் குறித்து தனது அரசாங்கத்தின் முழு ஆதரவுக்கு சமிக்ஞை செய்தார். ரில்லர்சன் அவரது CSIS உரையின் போது, இந்திய-அமெரிக்க உலக ளாவிய கூட்டுழைப்பு தொடர்பாக கூறிய கருத்துக்களில் இருந்த தெளிவான பார்வை குறித்து சுவராஜ் பாராட்டினார். மேலும், உலகின் இரண்டு மிகப்பெரிய ஜனநாயகங்களுக்கு இடையிலான இந்த உறவை பலப்படுத்தும் உங்களது வலுவான விருப்பத்தை நாங்களும் முழுமையாக பகிர்ந்து கொள்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இந்திய பிரதம மந்திரி நரேந்திர மோடியுடனும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுடனும் கூட ரில்லர்சன் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிதாக அறிவிக்கப்பட்ட தெற்காசிய கொள்கையை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பிராந்திய சுற்றுப்பயணத்தின் ஓர் அங்கமாக இந்த இந்திய விஜயம் இருந்தது. இந்த மூலோபாயம், சீனா, மற்றும் அதனுடன் கூட்டு வைத்திருக்கும் பாகிஸ்தான் போன்ற இந்த பிராந்தியங்களிலுள்ள நாடுகள் மீது அழுத்தத்தை அதிகரிப்பது மற்றும் இராணுவ குவிப்பை குறிப்பாக ஆப்கானிஸ்தானில் விரிவுபடுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியது. சவுதி அரேபியா, ஈராக், கட்டார், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் ரில்லர்சன் விஜயம் செய்தார்.

ஆப்கானிஸ்தானில், வோஷிங்டனுடனான புதுடில்லியின் கூட்டணிக்கான நோக்கம் பற்றி ரில்லர்சன் குறிப்பிட்டார். இந்தியாவுடனான உறவின் மீதான எங்களது பார்வை வெறுமனே குறிப்பிட்ட இந்த பிராந்தியம் பற்றியதாக இல்லாமல் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவுள்ளது ஆனால், ஜப்பான் முதல் இந்தியாவரையிலான ஒரு சுதந்திரமான மற்றும் வெளிப்படையான இந்திய-பசிபிக் பிராந்தியத்தை உருவாக்குவதாகும். எனவே இதுவொரு பரந்த உறவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.



இந்தியாவின் பிரதான போட்டி யாளரான பாகிஸ்தானை ரில்லர்சன் கண்டனம் செய்தார். இஸ்லாமாபாத்தில், பாதுகாப்பான புகலிடங்களைத் தேடும் பல பயங்கரவாத அமைப்புக்கள் அங்கே உள்ளன என்று முடிவுக்கு வருவதில் நாங்கள் வெளிப்படையாகவே இருந்தோம். இந்த அமைப்புக்களை சமாளிக்கும் விதமாக அமெரிக்கா அவ்விடத்திற்கேற்ற வழிமுறைகளைச் செயற்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் ரில்லர்சன் பேசிய போது, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆக்கிரமிப்பு படைகளை எதிர்த்து போராடும் இஸ்லாமிய குழுக்களை இஸ்லாமாபாத் நசுக்கத் தவறினால் அதற்கான உதவிகளின் அளவை ட்ரம்ப் நிர்வாகம் மட்டுப்படுத்தும் என்பது போன்ற எச்சரிக்கைகளை வலியுறுத்தினார்.



ஆப்கானிஸ்தானில் அமெரிக்க நலன்களை முன்னெடுத்துச் செல்கையில், பாகிஸ்தானுக்கு எதிராக ரில்லர்சன் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள், எல்லை கடந்த பயங்கரவாதத்தை இஸ்லாமாபாத் தான் ஊக்குவிக்கிறது என்ற இந்தியாவின் நீண்ட கால குற்றச்சாட்டுக் குறித்த ஒப்புதலாகவும் உள்ளது. இந்த கூற்றுக்களை, பேரினவாதத்திற்கு ஊக்கமளிக்கவும் கடந்த வருடம் ஆயுத மோதல்களுக்கு இட்டுச் சென்ற பாகிஸ்தானுடனான உக்கிரம் நிறைந்த எல்லைப்புற சச்சரவுகளை நியாயப்படுத்தவும், புதுடில்லி பயன்படுத்திக் கொண்டது.

ரில்லர்சனின் கருத்துக்களால் ஊக்கமளிக்கப்பட்டு, சுவராஜ் பின்வருமாறு கூறினார்: தீவிரவாத குழுக்களுக்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பயங்கரவாதம் மீதான கொள்கை வெற்றி பெற முடியும். சீனாவுடனான நெருக்கமான உறவுகளை விட்டு விலகிச் செல்ல பாகிஸ்தானுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அமெரிக்காவும் குற்றச்சாட்டுக்களை பயன்படுத்துகிறது.

இந்தியாவில் பேசியபோது, வட கொரியாவுடனான புதுடில்லியின் இராஜதந்திர உறவுகள் பற்றியும், ஈரானுடனான அதன் பொருளாதார மற்றும் மூலோபாய உறவுகள் பற்றியும் ரில்லர்சன் தனது கருத்துக்களை எழுப்பினார். ட்ரம்ப் நிர்வாகத்தின், வட கொரியாவுக்கு எதிரான ஆத்திரமூட்டும் அச்சுறுத்தல்கள் மற்றும் ஒபாமா நிர்வாகத்தால் கையெழுத்திடப் பட்ட ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தை முடக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் உள்ளடக்கத்தில் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

உலக அமைதிக்கு ஓர் அச்சுறுத் தலாக வட கொரியாவின் மட்டுப்படுத்தப்பட்ட அணுசக்தி மற்றும் ஏவுகணை தொகுப்புகள் இருக்கின்றன என அமெரிக்கா கூறிவரும் கண்டனங் களை பின்பற்றும் இந்தியா, பியோங்யாங்கிற்கு எதிரான ட்ரம்பின் ஆக்கிரோஷமான நிலைப்பாட்டுடன் ஏற்கனவே இணைந்து விட்டது. மேலும், அமெரிக்கா மூலம் நிறை வேற்றப்பட்டதான ஐ.நா. பாதுகாப்பு குழு தீர்மானத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கி வட கொரியாவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகளையும் இது விதித்துள்ளது.

வட கொரியாவுடனான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை முடிவுக்குகொண்டுவரவேண்டுமென்ற வோஷிங்டனின் கோரிக்கைகளை இந்தியா எதிர்த்து வந்ததாக சுவராஜ் கூறினார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மிகக் குறைந்த அளவிற்கு கணிசமாக குறைக்கப் பட்டுள்ளது என்றும், மேலும் இராஜ தந்திர உறவுகள் அப்படியே பின்பற்றப் பட வேண்டும் அதன் மூலம் சில தகவல்தொடர்பு வழிகள் இன்னும் பேணப்பட்டு வருகின்றன என்றும் கூறி அவர் அந்த உறவுகளைக் குறை மதிப்பிட்டார்.

வட கொரியாவிற்கு எதிரான அமெரிக்க ஆத்திரமூட்டல்களின் தொடர்ச்சியான அதிகரிப்போடு, பியோங்யாங் உடனான அனைத்து உறவுகளையும் முறித்துக்கொள்ள வலியுறுத்தும் வோஷிங்டனின் தீவிர அழுத்தத்தின் கீழ் இந்தியா அநேகமாக வரும். இருப்பினும், வட கொரியாவுடன் பேணப்படும் பொருளாதார மற்றும் இராஜதந்திரத் தொடர்புகளின் மட்டுப்படுத்தப்பட்ட குணாம்சத்தை ரில்லர்சன் ஏற்றுக்கொண்டார் என சுவராஜ் கூறினார்.

ஈரானுடனான இந்தியாவின் உறவுகளைப் பற்றி ஒரு சமரச அணுகுமுறையை ரில்லர்சன் எடுத்துக் கொண்டார். மேலும், சட்டபூர்வமான வணிக நடவடிக்கைகளில் குறுக்கிடுவதோ அல்லது ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்கள் அல்லது எங்களுடைய நட்பு மற்றும் கூட்டாளி நாடுகளின் நலன்களுக்கான பொருளாதார அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டை ஊக்குவிப்பது ஆகியவற்றில் குறுக்கிடுவதோ அமெரிக்காவின் குறிக்கோளாக இருக்கவில்லை என்றவர் கூறினார்.

இந்த நிலைப்பாடு, ஐரோப்பிய சக்திகள் ஈரானில் முதலீடு செய்யக் கூடாது என்ற ரில்லர்சனின் எச்சரிக்கைகளுக்கு முரணானது. ஒக்டோபர் 22 ஆம் திகதி சவுதி அரேபியாவில் பேசினார் ரில்லர்சன், அதன்போது ஈரானிய புரட்சிகர காவலருடன் வணிகம் செய்பவர்கள், ஐரோப்பிய நிறுவனங்கள் அல்லது உலகெங்கிலும் உள்ள ஏனைய நிறுவனங்கள் - எதுவானாலும் உண்மையில் பெரும் பணயத்தில் தான் செய்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

ஈரானுடனான இந்தியாவின் உற வுகள் குறித்து ரில்லர்சன் கொண்டி ருக்கும் மென்மையான நிலைப்பாடு, சீனாவின் வளர்ந்து வரும் செல் வாக்கை எதிர்கொள்ள, இப்பிராந்தி யத்தில் புதுடில்லியின் புவிசார் அரசியல் செல்வாக்கை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மூலோபாய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள ஈரானின் சபாஹார் துறைமுகத்தையும் மற்றும் ஆப்கானிஸ்தானுடன் இணையும் ஒரு போக்குவரத்து வழித்தடத்தையும் இந்தியா அபிவிருத்தி செய்து வருகிறது. இது எண்ணெய் மற்றும் எரிவாயு நிறைந்த ஆசிய பிராந்தியம் முழுவதிலும் இந்திய அணுகலை விரிவாக்கும் நோக்கம் கொண்டது. இந்த திட்டங்கள், யூரேசிய நிலப்பகுதியை பொருளாதார ரீதியாக ஒருங்கிணைக்க சீனா அதன் ஒரே இணைப்பு ஒரே பாதை (One Belt, One Roa) திட்டத்தின் கீழ் முயற்சிகள் மேற்கொள்வதற்கு எதிராக செயற்படும்.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு முன்னணியில் ஆஸ்திரேலியாவையும் இணைப்பதன் மூலம் சீன எதிர்ப்பு நான்குமுனை பேச்சுக்களை நிறுவுவதற்கான முன்மொழிவுகளை ரில்லர்சன் எழுப்புகிறாரா என்பது தெளிவாக தெரியவில்லை. ரில்லர்சன் தனது CSIS உரையில் அந்த முன்மொழிவை பதிவு செய்தார்.

இருப்பினும், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் டாரோ கொனோ கடந்த வியாழனன்று Nikkei நாளிதழுடன் பேசும்போது, ட்ரம்பின் அடுத்த வார ஆசிய சுற்றுப்பயணத்தின் போது ஜப்பானிய அரசாங்கம் இந்த நடவடிக்கையை முன்மொழியுமென தெரிவித்தார்.

(கேள்வி தொடரும்)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 07





## உன்னைச் சரணடைந்தேன்



### முதலாவது கம்பன் விழா 20.06.1980

இவ்விழா 1980 ஜூன் 20 ஆம் திகதி நடைபெற்றது. இம் முதல் விழாவுக்கு எங்கள் இந்துக் கல்லூரியின் முன்னைய நாள் அதிபர் சபாலிங்கத்தைத் தலைவராய் அழைத்திருந்தோம். அப்போதைய யாழ். மேயர் விஸ்வநாதன் சிறப்பதிதியாய் வந்திருந்தார். தன் தனிப்போக்கால் பெயர்பெற்றிருந்த வக்கீல் இராஜராஜேஸ்வரன் தங்கராஜா வாழ்த்துரை வழங்க வந்திருந்தார். ஐந்து மணிக்குத் தொடங்க இருந்த விழா, கூட்டம் வராததால் ஆறரை மணிக்குத் தொடங்கியது. சம்பிரதாய நிகழ்ச்சிகளின் பின், ஒரு கவியரங்கமும், பட்டிமண்டபமும் அமைத்திருந்தோம். வித்துவான் ஆறுமுகம் தலைமை தாங்க, அருட்கவி விநாசித்தம்பி, வீரமணி ஐயர், காரை சுந்தரம்பிள்ளை, அரியாலையூர் ஐயாத்துரை ஆகியோரோடு, எங்களுடன் படித்த நாயன்மார்கட்டு சிவகுமாரன், அவனது நண்பனான சற்குணநாதன் ஆகியோரும், கவியரங்கில் கலந்து கொண்டனர். கூட்டம் குறைவானாலும் வெற்றியாய் அமைந்த கவியரங்கம் அது.

கவியரங்கத்தின் பின், பட்டிமண்டபம் நடைபெற்றது. சிவராமலிங்கம் மாஸ்டர், சொக்கன், நா. சுப்பிரமணியஐயர், அ.சண்முகதாஸ், அ.குமரன், பெ.வரதராஜப் பெருமாள் (பின்னாளில் வடக்கு,கிழக்கு முதலமைச்சராய் இருந்தவர்), திருமதி சண்முகதாஸ், அம்மன்கிளி, மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரோடு நானும் பட்டிமண்டபத்தில் கலந்த கொண்டேன். வித்துவான் வேலன் நடுவராக இருந்தார். பட்டிமண்டபமும் வெற்றியாய் அமைந்தது.

நான் பேசி இறங்கியதும், அப்போது யாழில் பிரபலமாக இருந்த இசை அறிஞர் பரம் தில்லைராஜா ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித்து முத்தம் தந்தார். "நீ பெரியாளாய் வருவாயடா" என்று வாழ்த்தினார். மகிழ்ந்தேன். முதல் விழாவிலேயே சற்றுத்துடுக்குத்தனமாய்ப் பேசி, ஆசிரியர் சொக்கனின் பகை யைச் சம்பாதித்தேன்.

#### பேசிய பெண் யார்? அதிர்ச்சி தந்த ஆதீனத்தின் கேள்வி

என்னை உற்சாகப்படுத்திய ஒரு சுவாரஸ்யமான சம்பவம் அவ்விழாவில் நடந்தது. கதாபிரசங்கத்திற்காக வெளியே சென்றிருந்த ஆதீனக் குருமுதல்வர், இரவு திரும்பி வந்ததும், எங்கள் பட்டிமண்டபத்தை ஒலி நாடாவில் கேட்டிருக்கிறார். அடுத்தநாள் நான் அவரைச் சந்தித்தபோது, "பட்டிமண்டபத்தில் இந்தியத் தரத்தில் ஒரு பெண்மணி பேசியிருக்கிறாரே, அது யார்?" எனக் கேட்டார். அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஒலிநாடாவை அவர் போட்டுக் காட்டிய பின்புதான், அவர் என்னைத்தான் சொல்லியிருக்கிறார் எனும் உண்மை தெரிந்தது. தொடர்ந்து விழாக்களை நடத்தவேண்டும் எனும், உற்சாகத்தைத் தந்த சம்பவம் அது. அந்த விழா தந்த வெற்றியால், மாதம் ஒரு கம்பன் விழா நடத்துவது என முடிவு செய்தோம்.

#### முதலில் கம்பனைப் படியுங்கோ! திட்டு வாங்னோம்.

அந்த முதல் விழாக் கவியரங்கத்திற்கு, வித்துவான் ஆறுமுகத்தைத் தலைமை தாங்கக் கேட்டபோது, நாங்கள் வாங்கிய திட்டு இன்றைக்கும் நினைவில் இருக்கிறது. ஒரு நாள் அவரை வீதியில் சந்தித்து, "சேர்! நீங்கள் கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கவேணும்" என்றதும், முறைப்பாக "என்ன கவியரங்கம்?" என்றார். "ஒரு கம்பன் கழகம் தொடங்கியிருக்கிறம் சேர், அதற்கு ஓர் அறிமுகவிழா, அதிலேதான் கவியரங்கம்" என்றோம். "கம்பன் கழகமா, யார் தலைவர்?என்று கேட்டார். "திருநந்தகுமார் தான் தலைவர்" என்றதும், அவனை நோக்கி, "உனக்கு எத்தனை கம்பராமாயணப் பாட்டுப் பாடம்?" என்றார். அவன் மௌனமாய் நிற்க, "முதலில் இராமாயணத்தைப் படியுங்கோ, பிறகு கழகம் நடத்தலாம்" என்றார். பிறகு, ஏதேதோ சொல்லிக் கெஞ்சி, அவரை கவியரங்கத் தலைவராக்கினோம்.

#### கம்பன் கழகத்தின் முதல் அலுவலகம்

எங்கள் கழகத்தின் முதல் அலுவலகம், எங்கள் செயலாளர் குமாரதாசனின் வீட்டிலேயே அமைந்திருந்தது. 135, வாசிகசாலை வீதி, கல்லியங்காடு, யாழ்ப்பாணம் எனும், முகவரியில் அமைந்திருந்த அவன் வீட்டின் முன்னறை, எங்கள் முதல் அலுவலகமானது. இங்குதான் என் குருநாதர் பேராசிரியர் இராதகிருஷ்ணன் தன் முதற் பயணத்தின்போது வந்து தங்கியிருந்தார். எங்கள் கழகத்தின் முதல்ஆண்டுக்கூட்டமும் இங்குதான் நடந்தது.

#### பண்டிதர் கந்தையா குடும்பம்

கம்பன் கழகம் ஆயுள் முழுவதும் போற்றவேண்டிய இரு பெருமக்கள் குமாரதாசனின் தந்தை, தாயாரான, திரு.கந்தையா அவர்களும் ஸ்ரீபத்மா அவர்களும் ஆவர். திரு. கந்தையா அவர்கள் ஒரு பண்டிதர். தமிழ்மேல் விருப்பம் கொண்டவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மாணாக்கர்.

அவர் சொந்த ஊர் நெடுந்தீவு. குமாரதாசனின் தயாரும் அதே ஊரைச் சேர்ந்தவர்தான். அவரும் இனிய சுபாவம் மிகுந்தவர். அவர்களுக்கு, குமாரதாசன் மூத்த ஆண்பிள்ளை. பெற்றோர் குமாரதாசனில் அளவற்ற அன்பு வைத்திருந்தனர். மூத்தபிள்ளையான குமாரதாசனின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்காக, கம்பன் கழகத்தையும், என்னையும், பலகாலம் தங்கள் வீட்டிலேயே வைத்து வளர்த்தார்கள்.

குமாரதாசனின் பெற்றோருக்கு, கம்பன் கழகத்தின் பெயரால், நான் கொடுத்த தொல்லைகள் ஏராளம். அத்தனையையும் சகித்து, நாங்கள் வளரத்துணை செய்தார்கள். தங்கள் மூத்தபிள்ளையின் கல்வி, எதிர்காலம் எல்லாம் கழகத்தின் பெயரால் பாழாவதைப் பார்த்து உள்ளுக்குள் கொதித்தும், என்னை அவமரியாதை செய்யாமல் சகித்தார்கள். குமாரதாசனின் எதிர்காலம் கருதி அவர்கள் பின்னாளில் முரண்பட, நான் வாடகைக்கு இடமெடுத்துத் தனியே சென்றேன். குமாரதாசனும் பெற்றோருடன் முரண்பட்டு, என்னுடனேயே வந்து சிலகாலம் தங்கினான். அதையும் அப்பெரிய மனிதர்கள் தாங்கிக் கொண்டனர். அதையெல்லாம் இன்று நினைக்க, நெஞ்சம் எல்லையில்லா வருத்தமடைகிறது.

பின்னாளில் மிகப்பெருந்தன்மையோடு பழையவற்றை மறந்து, அவர்கள் என் தங்கைக்கு குமாரதாசனை, எந்த விதச் சீதனமும் எதிர்பார்க்காமல், திருமணம் செய்து வைத்தனர். இன்று அப்பெரியவர்கள் உயிருடன் இல்லை. காலங்கடந்து திரும்பிப் பார்க்க, அவர்கள் பெருந்தன்மை என்மனதில் வானளாவி விரிகிறது. அவர்களுக்கான கடனை, இன்னும் எத்தனை பிறவியில் தீர்க்கப் போகிறேனோ?

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir





# புதிய அரசமைப்பு உருவாக அரசியல் பௌத்தமே முட்டுக்கட்டை

செப்ரெம்பர் 21 அன்று வெளியிடப்பட்ட இலங்கையின் பரிந்துரைக்கப்பட்ட அரசமைப்பு மீதான இடைக்கால அறிக்கை தொடர்பாக பல்வேறு எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்த முயற்சிப்பவர்கள் தேசத்துரோகிகள் எனவும் இவர்கள் கொல்லப்படவேண்டியவர்கள் எனவும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இடைக்காலப் பரிந்துரைகளை உருவாக்குவதில் முன்னணி வகிப்பவர்களில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராவார் எனவும் இதனால் இவரது நடவடிக்கையைத் தான் எதிர்க்கிறார் எனவும் முன்னாள் இராஜதந்திரி தயான் ஜெயதிலக சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதை எதிர்த்து ஒக்ரோபர் மாதத்தின் ஆரம்பத்தில் இலங்கையைச் சேர்ந்த புலமைவாதியான அசோக பண்டாரகே தனது எதிர்ப்பை வெளி யிட்டிருந்தார். இதேவேளையில், புதிய அரசமைப்பானது இலங்கையின் ஒற்றையாட்சியைக் குழிதோண்டிப் புதைப்பதாக இலங்கையைச் சேர்ந்த அதிகாரம் மிக்க பௌத்த மதகுருமார்கள் தெரிவித்திருந்தனர்.

பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பில் 'பெரும்பான்மை அதிகாரப் பகிர்வு' என்கின்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளமையே பெரும் எதிர்ப்பு உருவாகுவதற்குக் காரணமாகும். ஏனெனில், இச்சொற்றொடர் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் பெரும்பான்மை அதிகாரங்களைப் பகிர்வதற்கு அனுமதிப்பதைப் பெரும்பான்மைச் சிங்களவர்கள் எதிர்க்கின்றனர்.

பெரும்பான்மைச் சிங்கள மக்கள் வாழும் நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களும் வடக்கு கிழக்கு போன்றே பெரும்பான்மை அதிகாரப் பகிர்வைப் பெறுகின்றன என பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பாக எவ்வித வாதங்களும் முன்வைக்கப்படவில்லை.

இதற்கப்பால், மத்திய மயப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்பு ஏற்கனவே சிங்கள மக்களுக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. 1948, 1972 மற்றும் 1978 களில் வரையப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்புக்களின் பிரகாரம் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டமையே இந்த நாட்டில் யுத்தம் ஒன்று உருவாகுவதற்கும் இது 26 ஆண்டுகள் தொடர்வதற்கும் வழிவகுத்தது.

இவ்வாறான கொடிய யுத்தத்தின் பின்னரும் கூட மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு சிங்கள அரசியல் சக்தியின் கணிசமான பங்கினர் எதிர்ப்பை வெளியிடுகின்றனர்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்குவதை எதிர்ப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, இவ்வாறு அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் தமிழ்மக்கள் தனியாகப் பிரிந்து செல்வதற்கான வழியேற்படலாம் என்கின்ற அச்சம் நிலவுகிறது.

இரண்டாவதாக, இலங்கைத் தீவு, பௌத்தமதத்தின் புனித வடிவம் என நீண்ட காலமாக நம்பப்படும் தேரவாத பௌத்தத்திற்குச் சொந்தம் என்பதால் பௌத்தர்கள் வாழாத வடக்கு மற்றும் கிழக்கிற்கு அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடாது எனக் கூறப்படுகிறது. இந்த மனோநிலை 'அரசியல் பௌத்தம்' என அடையாளம் காணப்படுகிறது.

தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்குப் பிராந்தியமானது பிரிந்து செல்லாது எனவும் இந்த நாடு தொடர்ந்தும் 'பிளவுபடாத ஐக்கிய' நாடாக இருக்கும் எனவும் இடைக்கால அறிக்கையில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது. இக்கூற்றை மேலும் தெளிவுபடுத்துவதற்காக உத்தியோகபூர்வ சிங்கள மொழிமூல இடைக்கால அறிக்கையில் 'ஏக்கய' (சிங்களத்தில் ஒற்றையாட்சி என்கின்ற கருத்தாகும்) என அரசமைப்பை விவரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளையில், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல அறிக்கைகளில் ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி போன்ற பதங்கள் மிகக் கவனமாகத் தவிர்க்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு பிரிந்து சென்றுவிடும் என்கின்ற அரசியல் பௌத்தத்தால் வடிவமைக்கப்பட்ட அச்சத்தின் காரணமாகவே இப்பதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். பரிந்துரைக்கப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அரசியல் பௌத்தமே பெரும் தடையாக உள்ளது.




அரசியல் அதிகாரப் பகிர்வு முறைமையை ஆதரிக்குமாறும் உத்தேச அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றத்திற்கு ஆதரவளிக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒக்ரோபர் 30 அன்று நாடாளுமன்றில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோளைவிடுத்திருந்தார்.

இலங்கை நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு முதல் 30 ஆண்டுகளில் தமிழ் அரசியல்வாதிகள் பல்வேறு வேண்டுகோள்களை விடுத்த போதிலும் சிங்கள அரசியல்வாதிகள் இவற்றைத் தொடர்ந்தும் புறக்கணித்து வந்துள்ளனர். சிங்கள பெரும்பான்மை சமூகமானது ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் அரசியல் அதிகாரத்தை அனுபவித்து வந்துள்ளமையே இதற்கான காரணமாகும்.

தமிழ்த் தலைமையுடன் வரையறுக்கப்பட்ட சுயாட்சியுடன் கூடிய அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பாக இரண்டு தடவைகள் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சிங்கள பெரும்பான்மை சமூகத்தின் எதிர்ப்பைத் தொடர்ந்து இவை கைவிடப்பட்டன. தமிழ் அரசியல்வாதிகளின் இவ்வாறான வேண்டுகோள்கள் எப்போதும் செவிடன் காதில் ஊதிய சங்குகள் போலாகியுள்ளன.

எதிர்காலத்தில் மீண்டுமொரு யுத்தம் இடம்பெறுவதைத் தவிர்க்க வேண்டுமாயின் தமிழ் மக்களின் கோரிக்கைகள் செவிசாய்க்கப்பட வேண்டும்.

இதேவேளையில், சிங்களத் தலைமையானது அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்குவதில் விருப்பம் காண்பிக்கவில்லை எனவும் இதனால் தமிழ் மக்கள் அனைத்துலகச் சட்டங்கள் மூலம் தமக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் எனவும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதாவது, அனைத்துலகச் சட்டம் என்பது அனைத்துலக சமூகமானது. தமிழ் மக்களின் பிரச்சினைகளில் தலையீடு செய்வதற்கான சூழலை உருவாக்குவதாகும் என்பதே உண்மையான அரசியலாகும்.

வடகிழக்குத் தன்னாட்சி கொழும்பில் அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்கை எதிர்ப்பதற்கு உதவும் என்ற தனது வாதத்தில் விக்னேஸ்வரனால் உறுதியாக இருக்க முடியுமானால், ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் சுயாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவை விக்னேஸ்வரனால் வெற்றிகரமாக வென்றெடுக்க முடியும்.

வழிமூலம் - The diplomat
ஆங்கிலத்தில் - Ana Pararajasingham
மொழியாக்கம் - நித்தியபாரதி

# நல்லிணக்கத்துக்கு...

(09ஆம் பக்கம் பார்க்க)

அன்பு, அகிம்சை, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை போன்ற பண்புகளைக் இலங்கையர் நாம் மறந்ததால்தான் பெரிய யுத்தத்தை அரங்கேற்றினோம். கைதுகளும் காணாமற்போதலும் அடக்குமுறையையும் நிலைநாட்டினோம். ஆனால், இன்று ஆயுதப்போர் நிறுத்தப்பட்ட நிலையில், நல்லாட்சி நடைபெறுவதாகக் கூறிக் கொள்கின்றோம். ஆனால், மீண்டும் இனக்குரோதம், இனத்துவேசம், இனமுரண்பாடுகளை உருவாக்குவதில் முன்னின்று மூர்க்கத்தனமாகப் பலர் செயற்படுகின்றனர். இன நல்லிணக்கம், இன ஒருமைப்பாடு, சகவாழ்வு சகிப்புத்தன்மை ஏற்பட வேண்டும் என்பதற்காக மறைந்த வண, சோபித தேரர் போன்ற பௌத்த துறவிகள் கடுமையாக உழைத்தனர். அவர்களின் பாதைகளை எங்களின் வழிகளாக்குவோம். நாம் அனைவருமே கடவுளின் குழந்தைகள். கடவுள் விரும்பும் அமைதியை உருவாக்கவே படைக்கப்பட்டவர்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் எமது வாழ்க்கையை வழிநடத்திச்செல்ல சகிப்புத்தன்மையைக் கையிலெடுப்போம். வருங்காலத் தலைமுறையின் வாழ்வு இனிதாக அமைய, சாதி மதம் என்னும் இருளை நீக்கி, சமத்துவம் என்னும் ஒளியைப் பிறப்பித்து அன்பு, சகிப்புத்தன்மை என்னும் வேர்களை நம் குழந்தைகள் மனதில் ஆழமாகப் பதிப்போம். சகிப்புத்தன்மையால் சமாதானத்துடன் கூடிய ஓர் உலகை உருவாக்க முடியும்.

இன்று உலகம் கைக்குள் சுருங்கிவிட்டது. நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளோம். இவ்வாறான சூழலில் நாம் ஒவ்வொருவரும் அமைதியாக வாழ்வதற்கான சரியான முறையைக் கைக்கொள்ளவேண்டும். இதற்குச்சகிப்புத்தன்மை அவசியமானதொன்றாகும். இந்தச் சகிப்புத்தன்மை அனைவரும் மிகவும் மதிக்க வேண்டிய ஒன்றாகக் காணப்படுகிறது. பல்வேறு நடத்தை கோலங்களைக் கொண்ட எமது சமூகத்தில் சகிப்புத்தன்மை அவசியமானதாகும். சகிப்புத்தன்மை இல்லாமையே இன்று அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலவேராக மாறியுள்ளது. அகிம்சை அனைவரையும் கடவுளுடைய குழந்தை யாக சகோதரர், சகோதரியாக நோக்குகின்றது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் மற்றவர்களுக்கு தீங்கு செய்யக்கூடாது என வலியுறுத்துகின்றது. நாமனைவரும் ஒன்றுபட்டு வன்முறையின்றி எப்பொழுதும் செயற்படவேண்டும் சகிப்புத்தன்மையை வளரக்க வேண்டும் சகோதரத்துவத்தில் சகவாழ்வு நிலைநாட்ட வேண்டும். ★



வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 1 – 30

# கற்பக விருட்சம் வேம்பு

தமிழ்ப் பெயர்: வேம்பு அல்லது வேப்பை
ஆங்கிலப் பெயர்: Neem
தாவரவியற் பெயர்: Azadirachtaindica
(அசாடி றக்ரா இன்டிக்கா)

முதன் முதலில் இந்தியாவில் தோன்றியது என நம்பப்படு வதோடு காப்புரிமை 2000 ஆண்டில் ஐரோப்பிய காப்புரிமைக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்தியா, இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் எல்லா காலநிலை வலயங்களிலும் அதிகளவில் பரவிக் காணப்படுகின்றது. கண்ணுக்கு எதிரே கைக்கு எட்டிய தூரத்தில் கிடைக்கும் மூலிகை தாவரம் வேம்பு காற்று மண்டலத்தை சுத்தம் செய்து நம் நோய்களைத் தீர்க்கும் கற்பகமர மாக திகழ்கின்றது.

சராசரியாக 15 மீற்றர் வரை உயரமாக வளரக்கூடிய மரம். இலைகள் இறகுவடிவமானவை, பல சிற்றிலைகள் கொண்டவை, ஒவ்வொரு சிற்றிலையும் சாதாரண இலையைப் போன்றே காணப்படும். பூக்கள் சிறியவை, வெண்மை நிறமானவை, சிறுகொத்துக்களில் தொகுப்பாகக் காணப்படும். காய்கள் பச்சை நிறமானவை. பழங்கள் 1.5 – 2 செ.மீவரை நீளமானவை, மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஒவ்வொரு பழத்திலும் ஒருவிதை காணப்படும்.



வித்தின் மூலம் இனம் பெருக்கும் தாவரம். இயற்கையாக பழங்கள் பறவைகள், விலங்குகளால் உண்ணப்பட்டு விதைகள் பரம்பலடையக் கூடியவை. செயற்கையான முறையில் விதைகளை சேகரித்து பொதிப்பைகளில் விதையை நடுகைசெய்து புதியதாவரத்தை பெற்றுக் கொள்ளலாம். பூத்தல் ஒருபோகத்திற்குரியது ஆகையால் பழங்கள் கிடைக்கும் காலங்களிலேயே புதியகன்றுகளை உருவாக்கிக் கொள்ளமுடியும். இதன் பயன் தருகாலம் 150 வருடங்களுக்கு மேலாகும்.

என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை.

**பயன்பாடுகள்**

★ வேம்பில் உள்ள அசாடிறக்ரின் எனும் இரசாயனப்பொருள் பூச்சிவிரட்டி களிம்பு (Cream) தயாரிப்பில் பயன்படுகின்றது.

★ இலைகள் கோயில்களில் பூமாலையாக, வீட்டில் குற்றம் தாங்கும் பொருளாக, துப்புரவு நீக்கியாக பயன்படுகின்றது.

★ பச்சை இலைகள் பசுந்தாட் பசளையாகவும் உலர் இலைகள் சேதன எருவாகவும் பயன்படுகின்றன.

★ சாலையோரங்களில் நிழல் தரும் மரமாக உள்ளது.

★ முதிர்ந்தமரம் அரி மரமாகவும், கைப்பணிப் பொருள்கள் செய்யவும் பயன்படுகின்றது.

★ காற்றுத் தடையாக பயன்படுகின்றது.

★ இலை, விதை என்பன சேதன விவசாயத்தில் சேதனபீடை நாசினி தயாரிப்பில் பயன்படுகின்றது.

★ அம்மை, பொக்குளிப்பான் போன்ற நோய்களுக்கு வெப்ப குளிர்த்தி படுக்கை பொருளாகப் பயன்படும்.

**மருத்துவ குணங்கள்**

**இலை** : குடல் புழுக்களைக் கட்டுப் படுத்தும், குடல் வாயுவை அகற்றும், வீக்கம், கட்டிகளை கரைக்கும், படை சிரங்கிகைக் கட்டுப்படுத்தும், தோல் நோய் ஏதிர்ப்புசக்தி அதிகரிக்கும்

**விதை/எண்ணெய்**: விஷமுறிவை ஏற்படுத்தும், தோல் நோய்களை கட்டுப் படுத்தும், தலைமுடி உதிர்தல் தலைப் பேன் பொடுகுத் தொல்லை இள நரையை கட்டுப்படுத்தும்,

**பூ** : குடல் புழுக்களைக் கட்டுப்படுத்தும், காது தொடர்பான நோய்களை குணப்படுத்தும்.

**பட்டை** : நீரிழிவைக் கட்டுப்படுத்தும், முறைக் காய்ச்சலை கட்டுப்படுத்தும், முளைக் காய்ச்சலை கட்டுப்படுத்தும், உடல் பலத்தை அதிகரிக்கும், பல்வலியை குணப்படுத்தும், மாத விடாய் பிரச்சினையைத் தீர்க்கும்.

**ஆக்கம்: க.கதீசன்,**
விவசாயப்போதனாசிரியர்.

# கட்டாய பாடமாகத் தகவல் தொழில்நுட்பம்!

## அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறுகிறார்



பாடசாலை மாணவர்களுக்கு எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பம் கட்டாய பாடமாக மாற்றப்படும் என்று அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிராம மட்டத்தில் தகவல் தொழில்நுட்ப பாட அறிவை மேம்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

எதிர்காலத்தில் அனைத்துப் பாட விதானங்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் முக்கிய பாடமாக அமையவுள்ளது.

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்குமுறையான தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்க கல்வி அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# நெஸ்பி பிரபுவிற்கு இலங்கை அரசு பாராட்டு!



பிரித்தானியாவில் நெஸ்பி பிரபு இலங்கை தொடர்பில் மத்தியஸ்தம் வகித்தமைக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின்போது அவர் நேற்றுமுன்தினம் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர்க்காலத்தில் இடம்பெற்ற சம்பவத்தின்போது உயிரிழந்தோர்கள் தொடர்பில் நெஸ்பி பிரபுவின் கூற்றின் மூலம் இலங்கை இராணுவத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை திருத்தி அமைக்க முடியும் என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஆள்கடத்தல், எல்லைப் பாதுகாப்பு குறித்து புதிய சட்ட வரைவுக்கான பணி ஆரம்பம்!

## அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

இலங்கைக்குள் இடம்பெறும் ஆள் கடத்தல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு குறித்து புதிய சட்ட வரைவுக்கான பணி இடம்பெற்றுவருகிறது என சட்டம் ஒழுங்கு மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத் நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பயிற்சி செயலமர்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் சாகல ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் புலம்பெயர் ஆள் கடத்தலைத் தடுப்பதற்கும், நாட்டின் எல்லை பாதுகாப்பிற்குமான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். சிறப்பு நடைமுறையும் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக வலுவான சட்டங்கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறான வலுவான சட் டங்கள் இல்லாமல் போகும் பட்சத்தில், ஆட்கடத்தல் செயற்பாட்டைக் கட்டுப் படுத்துவது சிக்கலாக அமையும்.

எனவே, இதன் ஓர் அங்கமாக, ஆள் கடத்தல்காரர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் முகமாக, விரிவான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஆஸ்திரேலியாவின் மூலோ பாய கொள்கை நிறுவனம் இலங்கையில் புலம்பெயர் ஆள் கடத்தலைத் தடுப்பதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மேற்கு, வடமேற்கு, தெற்கு கடற்கரைகளை இலக்காகக் கொண்டு ஆள் கடத்தல்கள் இடம்பெறுகின்றன. இவர்கள் மேற்கொள்ளும் ஊழல் செயற்பாடுகளும் அம்பலமாகி இருக்கின்றன.

போலி கடவுச்சீட்டுக்களை தயாரிக்க அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவற்றை தடுப்பதற்கான விரிவான வேலைத்திட்டம் அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வருமான வரிச் சோதனையில் அரசியல் நோக்கம் இல்லை

சென்னை, நவ.16

வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்துவது என்பது வழக்கமானது தான். இதில் எந்தவித அரசியலும் இல்லை என்று இளவரசியின் மகள் கிருஷ்ணப்பிரியா தெரிவித்துள்ளார்.

சசிகலா குடும்பத்தினர் வீடுகளில் கடந்த 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை 5 நாள்கள் அதிரடிச் சோதனை நடத்திய வருமான வரி அதிகாரிகள் அடுத்தகட்ட நடவடிக்கையாக விசாரணையைத் தொடங்கியுள்ளனர். இதற்காகச் சசிகலா குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு வருமான வரித்துறைஅதிகாரிகள்அழைப்பாணை அனுப்பினார்கள்.

அந்த அழைப்பாணையை ஏற்று முதலில் இளவரசியின் மகன் விவேக், சிவகுமார், பூங்குன்றன் ஆகிய மூன்று பேரும் வருமான வரித்துறை அலுவலகத்துக்குச் சென்று ஆஜரானார்கள். அவர்களிடம் அதிகாரிகள் 187 இடங்களில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களைக் காண்பித்து கேள்விகள் எழுப்பினார்கள். இதையடுத்து நேற்றுமுன் தினம் ஜாஸ் சினிமாஸ் நிறுவனத்தின் 3 உயர் அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களிடம் ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள ஜாஸ் சினிமாஸ், எப்படி சசிகலா குடும்பத்துக்கு கை மாறியது என்று விசாரித்தனர். அவர்கள் கொடுத்த தகவல்கள் வீடியோவில் பதிவு செய்யப்பட்டன.

மூன்றாவது நாளான நேற்று இளவரசியின் 2 மகள்கள் மற்றும் ஜெயா டி.வி. முகாமையாளர் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு அதிகாரிகள் அழைப்பாணை அனுப்பி இருந்தனர். அதை ஏற்று இளவரசியின் மகள்கள் கிருஷ்ணப்பிரியா, ஷகீலா, ஜெயா டி.வி. முகாமையாளர் நடராஜன் ஆகியோர் ஆஜ ரானார்கள். அவர்கள் மூவரிடமும் நீண்ட நேரம் தனி தனியாக விசாரணை நடத்தப்பட்டது.

அதிகாரிகளின் 5 நாள்கள் சோதனையில் கிருஷ்ணப்பிரியா வீட்டிலும், விவேக் வீட்டிலும் தான் அதிகப்படியான ஆவணங்கள் சிக்கின எனக் கூறப்படுகிறது. நூற்றுக்கணக்கான அந்த ஆவணங்களில் சொத்துகள் வாங்கப்பட்டிருக்கின்றமை, நிறுவனங்கள் தொடங்கியமை போன்ற தகவல்கள் இருந்தன. அந்த ஆவணங்களை காண்பித்து அதிகாரிகள் விசாரணையை மேற்கொண்டனர்.

சசிகலா குடும்பத்தினர் வரி ஏய்ப்புச் செய்வதற்காகவே சுமார் 60 போலி நிறுவனங்களைத் தொடங்கினர் எனக் கூறப்படுகிறது. அந்தப் போலி நிறுவனங்களின் செயற்பாடுகள் அனைத்தும் கிருஷ்ணப்பிரியா கட்டுப்பாட்டில் நடந்தது எனத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்த அதிகாரிகள் விசாரணை செய்தனர். இளவரசியின் மற்றொரு மகள் ஷகீலாவிடமும் இதே மாதிரியான விசாரணையை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த பின் கிருஷ்ணப்பிரியா வெளியில் வந்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு :-

வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்துவது என்பது வழக்கமானது தான். இதில் எந்தவித அரசியலும் இல்லை. எனது வீட்டில் இருந்து எந்த ஆவணங்களும் கைப்பற்றப்படவில்லை. எனது சொத்துக் கணக்கைக் காட்டுவதற்காகவே வருமான வரித்துறை அலுவலகத்துக்கு வந்தேன். வருமான வரித்துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுப்பேன் என்று தெரிவித்துள்ளார். (ப)



இளவரசியின் மகள் கிருஷ்ணப்பிரியா தெரிவிப்பு

## குடியரசு தினவிழாவில் பங்கேற்குமாறு 10 நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு




69ஆவது குடியரசு தின விழாவில் பங்கேற்குமாறு ஆசியான் உச்சி மாநாட்டுக்கு வந்திருந்த 10 நாட்டுத் தலைவர்களுக்கும் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி ஆசியான் உச்சி மாநாடு, கிழக்கு ஆசிய மாநாடு ஆகியவற்றில் பங்கேற்பதற்காக பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு கடந்த 12ஆம் திகதி புறப்பட்டுச் சென்றார். அவர் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீன அதிபர் லீ கெசி யாங் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இந்த நிலையில், 69ஆவது குடியரசு தின விழாவில் பங்கேற்க ஆசியான் நாட்டு தலைவர்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார். ஆசியாவில் 10 நாடுகள் உள்ளன. மோடியின் இந்த அழைப்பை 10 நாட்டுத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர். இதை வெளியுறவுத் துறைச் செயலாளர் பிரித்திசரண் தெரிவித்துள்ளார்.

இந்தியா- ஆசியான் சிறப்பு மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி டில்லியில் நடக்கிறது. இந்த மாநாட்டில் ஆசியான் அமைப்பின் உள்ள 10 நாட்டுத் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். அதற்கு மறுநாள் 69ஆவது குடியரசு தினவிழா கொண்டாடப்படுகிறது.

இந்த மாநாட்டுக்குப் பிறகு குடியரசு தின விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக நீங்கள் கலந்து கொள்கின்றமையை 125 கோடி இந்தியர்கள் ஆர்வத்துடன் வரவேற்கின்றனர் எனப் பிரதமர் தனது அழைப்பில் தெரிவித்துள்ளார்.

## வருமானவரிச் சோதனை: சிறைச்சாலையில் சசிகலாவுடன் சட்டத்தரணிகள் ஆலோசனை

பெங்களூர்,நவ.16

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா வருமானவரி சோதனை தொடர்பாக சட்டத்தரணிகளுடன் சுமார் 2 மணிநேரம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

சசிகலாவின் தம்பி திவாகரன், உறவினர்கள் டி.டி.வி. தினகரன், இளவரசியின் மகன், ஜெயா டி.வி.யின் தலைமை செயல் அதிகாரியுமான விவேக், கிருஷ்ணபிரியா மற்றும் உறவினர்கள் வீடு, அலுவலகங்கள் உட்பட மொத்தம் 187 இடங்களில் அதிரடிச் சோதனை நடந்தது.பெங்களூரில் உள்ள கர்நாடக மாநில அ.தி.மு.க. அம்மா அணிச் செயலாளர் புகழேந்தி வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா இந்தச் சோதனை பற்றி அறிந்தும் அதிர்ச்சியடைந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் சட்டத்தரணி அசோகனை வரவழைத்துப் பேசினார். அவருடன் 2 மணி நேரம் ஆலோசனை நடத்தினார். அதன்பிறகு சசிகலா 2 கடிதங்களைச் சட்டத்தரணியிடம் கொடுத்து அனுப்பினார் எனத் தெரிகிறது.

அந்தக் கடிதங்கள் டி.டி.வி. தினகரன் மற்றும் விவேக் ஆகியோருக்கு எழுதப்பட்ட கடிதங்களாகும். இந்தக் கடிதங்களை நேற்று அசோகன் சென்னையில் தினகரன் மற்றும் விவேக்கை சந்தித்து நேரில் வழங்கினார்.

அந்தக்கடிதத்தில் வருமானவரி அதிகாரிகள் விசாரணையின் போது அளிக்க வேண்டிய பதில்கள், தாக்கல் செய்யவேண்டிய ஆவணங்கள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களைச் சசிகலா கோடிட்டுக் காட்டி உள்ளார். இளவரசியின் மகள் கிருஷ்ணப்பிரியாவுக்கும் சில தகவல்களைச் சசிகலா சொல்லி அனுப்பியுள்ளார்.



நேற்று முன்தினம் சசிகலாவை சட்டத்தரணிகள் மூர்த்தி ராவ், கிருஷ்ணப்பா ஒன்றரை மணி நேரம் சந்தித்துப் பேசினார் எனக் கூறப்படுகிறது. (ப)

## காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாக். அத்துமீறித் தாக்குதல்

**இந்தியா பதிலடி**

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் செக்டார் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறித் துப்பாக்கிச்சூடு நடத்தி வருகின்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் செக்டார் பகுதியில் உள்ள எல்லைக்கட்டுப்பாட்டுக் கோடு அருகே, நேற்று காலை பாகிஸ்தான் இராணுவத்தினர் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி துப்பாக்கி மற்றும் சிறிய ரக மோட்டார் குண்டுகளால் இந்திய நிலைகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனையடுத்து, இந்தியா தரப்பில் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர் என இராணுவச் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். கடந்த 2ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைவீரர் தபான் மோண்டல் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் சோதனைச் சாவடிகளில் தலிபான்கள் ஆவேசத் தாக்குதல்





22 பொலிஸார், 45 தீவிரவாதிகள் சாவு

காபுல்,நவ.16

ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள கந்தஹார் மாகாணத்தில் 15 சோதனைச் சாவடிகளின் மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய ஆவேச தாக்குதலில் 22 பொலிஸார் உயிரிழந்தனர். 45 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்திவரும் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் உள்நாட்டு இராணுவத்துடன் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு இராணுவமும் செயலாற்றி வருகின்றது.

இந்த நிலையில், அந்நாட்டின் கந்தஹார் மாகாணத்துக்குட்பட்ட மேவான்ட் மற்றும் சாரி மாவட்டங்களில் உள்ள 15 சோதனைச் சாவடிகளின் மீது நேற்றுமுன்தினம் இரவு தலிபான் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் பல மணி நேரம் நீடித்த துப்பாக்கிச் சண்டையில் 22 பொலிஸார் பலியாகினர். 15 பொலிஸார் காயம் அடைந்தனர்.

தாக்குதல் நடத்த வந்த தீவிரவாதிகளில் 45 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும், காயங்களுடன் 35 பேர் பிடிபட்டனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஈரான் நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை 530 ஆக உயர்வு



டெக்ரான்,நவ.16

ஈரான் - ஈராக் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 530 ஆக அதிகரித்துள்ளது.

ஈரான் மற்றும் ஈராக் நாடுகளின் எல்லையிலும் 7.3 ரிச்டரில் சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. ஈராக் குர்திஸ்தானில் ஹாலாப்ஜாவை மையமாகக் கொண்டு இந்தப் பூகம்பம் உருவானது. இதில் மேற்கு ஈரானில் உள்ள சார்போல்-இ-ஷகாப் நகரில்தான் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இது கெர்மான்ஷா மாகாணத்தில் ஈராக் எல்லையில் உள்ளது.

இங்குள்ள முக்கியமான வைத்தியசாலை மிகக் கடுமையான சேதம் அடைந்தது. இது இடிந்ததில் அங்கு தங்கிச் சிகிச்சை பெற்ற ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கிக் காயம் அடைந்தனர். இவை தவிர மேலும் பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இடிபாடுகளில் சிக்கி தவிப்போரை மீட்கும் பணியில் இராணுவ வீரர்களும், எல்லைப் படை வீரர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாக மீட்பு படையினரும் உள்ளனர்.

பூகம்பத்தின் போது கட்டட இடிபாடுகளில் சிக்கி 7 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். இந்த ஆண்டு சர்வதேச அளவில் நடந்த பேரிடர் சம்பவங்களில் இந்தப் பூகம்பத்தில்தான் அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## ஸிம்பாப்வேயில் ராணுவப் புரட்சியா? பீரங்கிகளுடன் வீரர்கள் குவிப்பு


ஆபிரிக்க நாடான ஸிம்பாப்வே தலைநகர் ஹரரே நகரை இராணுவம் சுற்றி வளைத்துள்ளது. அரசு ஊடகத் தலைமையகத்தை இராணுவம் சிறைப்பிடித்துள்ளதால் இராணுவப் புரட்சிக்கு அடித்தளமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆபிரிக்க நாடான ஸிம்பாப்வேயில் ராபர்ட் முகபே அதிபராகப் பதவி வகித்து வருகின்றார். இந்த நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை தலைநகர் ஹரரேவை இராணுவப் பீரங்கிகள் சுற்றி வளைத்தன. அதிகளவிலான இராணுவ வீரர்கள் தலைநகரை சுற்றி குவிக்கப்பட்டுள்ளனர்.

அப்போது, துப்பாக்கியாலும் பீரங்கியாலும் சுடும் சப்தம் கேட்டது எனவும் கூறப்படுகிறது. அந்நாட்டு அரசு ஊடகத் தலைமையகத்தையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது.

அதிகாரத்தைத் தனது வசம் கொண்டு வர முயற்சிக்கின்றார் எனக்கூறி அந்நாட்டுத் துணை அதிபர் எம்மர்சன் நாங்காவாவை கடந்த வாரம் பதவி நீக்கம் செய்தார் முகபே. இதனால், அவர் இராணுவத் தளபதி ஜெனரல் சிவெங்கா உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## ட்ரம்புக்கு நடுவிரல் காட்டி வேலையிழந்தார் பெண்



வொஷிங்டன்,நவ.16

அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் காரில் சென்று கொண்டிருந்தபோது, அவரை நோக்கி அவமரியாதை செய்யும் விதமாக நடுவிரலைக் காட்டி பின்னர் வேலையிழந்த ஜூலிக்கு 70 ஆயிரம் டொலர்கள் நிதியுதவி திரட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பாதுகாவலர்கள் புடைசூழத் தனது காரில் சென்று கொண்டிருந்த போது, அவ்வழியாக சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஜூலி ப்ரிஸ்க்மன் என்ற 50 வயதுப் பெண், ட்ரம்ப்பை அவமரியாதை செய்யும் விதமாக தனது நடுவிரலை உயர்த்திக் காட்டினார். இதைப் பத்திரிகையாளர் ஒருவர் படம் பிடித்துவிட அது இணையத் தளத்தில் வைரலானது.

இதையடுத்து, கடந்த 6ஆம் திகதி ஜூலி பணியாற்றிவந்த நிறுவனம் அவரைப் பணியில் இருந்து விலக்கியது. இதுபற்றித் தெரியவந்த இணையத் தள நிறுவனம் ஒன்று, ஜூலிக்கு ஆதரவளிக்கும் வகையில் நிதி திரட்டும் பணியை ஆரம்பித்தது.

இதில் கலந்துகொண்ட சுமார் மூவாயிரம் பேர், ஐந்து டொலர்கள் முதல் 250 டொலர்கள் வரை நிதியுதவி செய்தனர். இதுவரை சுமார் 70 ஆயிரம் டொலர்கள் நிதி சேர்ந்துள்ளது.

இந்தத் தொகை முழுவதும் நேரடியாக ஜூலிக்கு வழங்கப்பட்டு விட்டது. இந்தத் தருணத்தில் நான் ஜூலிக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அவரது தைரிய குணம் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று புகழ்ந்திருக்கிறார் அந்த இணையத்தள உரிமையாளர்.

## சிறிய ரக பயணிகள் விமானம் விழுந்து நொறுங்கி விபத்து

### குழந்தை உட்பட 6 பேர் பலி

ரஷ்யாவின் கிழக்கு மாகாணப் பகுதியில் சிறிய ரக பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் ஒரு குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் உள்ள காபரோவ்ஸ்க் மாகாணத்தில் இருந்து ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள நெல்கன் என்ற கிராமத்தில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது எனக் கூறப்படுகிறது. காபரோவ்ஸ்க் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான 19 பேர் செல்லக்கூடிய சிறிய ரக விமானமே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ட்ரம்புடன் ரஷ்ய பிரதமர் சந்திப்பு

ஆசியான் உச்சி மாநாட்டின் இடையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை ரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெட்வடேவ்வை நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

'ஆசியான்' எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உச்சி மாநாடு பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, சீன பிரதமர் லி கெக்கியாங், ரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெட்வடேவ் உட்பட இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள 10நாடுகளின்தலைவர்களும்பங்கேற்று வருகின்றனர். இந்த நிலையில், இந்த மாநாட்டுக்கு இடையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை ரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெட்வடேவ்வைச் சந்தித்துப் பேசினார்.

ஆசியான் அமைப்பு தொடங்கப்பட்டதன் ஐம்பதாவது ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியின்போது இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது என ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ட்ரம்ப் மிகவும் வெளிப்படையானவர், நன்கு புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் கொண்டவர் என டிமிட்ரி மெட்வடேவ் குறிப்பிட்டார் எனவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவில் வரலாறு படைக்குமா? இலங்கை கிரிக்கெட் அணி



அண்மைய நாள்களில் அதிகமான தோல்விகளையே பார்த்துப் பழக் கப்பட்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் அணி அதிலிருந்து மீள்வதற்காகக் கடும் சிரத்தைகளை எடுத்து வருகின்றது. இப்படியான தருணத்தில் மூன்று வகைப் போட்டிகளிலும் இப்போதைய நாள்களில் மலைக்க வைக்கும்படியான ஆட்டத்தை வெளிப்படுத்தி கிரிக் கெட் உலகின் முடிசூடா மன்னராக மாறியிருக்கும் இந்தியாவுடன் நடைபெறவுள்ள தொடர் இந்த வருடத்தில் கொடுக்கப்பட்ட மிகப் பெரும் சவால் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இச் சவாலை எதிர்கொள்வதற்காக தமது அயல் தேசத்துக்கு பயணமாகியிருக்கும் இலங்கை அணி முதற்கட்டமாகக் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று ஆரம்பமாக விருக்கும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியாவுடன்மோதுகின்றது. இதுவரையில் இந்திய மண்ணில் எந்தவொரு டெஸ்ட் வெற்றியினையும் இலங்கை பதிவு செய்திருக்காதமையினால் வரலாற்றை மாற்றும் வாய்ப்பு பாகிஸ்தானுடனான அண்மைய டெஸ்ட் தொடரை 2:0 எனக் கைப் பற்றிய இலங்கை இளம் வீரகளுக்கு மீண்டும் கிட்டியிருக்கின்றது.

எனவே, நடைபெறப்போகும் அயல் தேசங்களுக்கிடையிலான இந்த டெஸ்ட் தொடர் பற்றிய ஒரு முன்னோட்டத்தை நாம் பார்ப்போம்.

### வரலாறு

1982ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணிக்கு தமது முதல் டெஸ்ட் வெற்றியைப் பெறுவதற்கு மூன்று வருடங்கள் தேவைப்பட்டிருந்தது. இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த வெற்றி இந்திய அணிக்கெதிராகவே 1985ஆம் ஆண்டில் பெறப்பட்டது.



அப்போட்டியோடு சேர்த்து இன்றுவரை இரண்டு அணிகளும் 41 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளன. இதில் 19 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றுள்ளதோடு, இலங்கை அணி 7 போட்டிகளைக் கைப்பற்றியிருக்கின்றது. 19 போட்டிகள் சமநிலை அடைந்திருக்கின்றன.

தொடர் நடைபெறப் போகும் இந்தியாவில் இரண்டு அணிகளுக்குமிடையே 17 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 10 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றுள்ளதோடு 7 போட்டிகள் சமநிலை அடைந்திருக்கின்றன.

இலங்கை கிரிக்கெட் அணி, இந்தியாவோடு சேர்த்து ஆஸ்திரேலியாவிலும் டெஸ்ட் வெற்றியொன்றை இதுவரையில் சுவீகரிக்காமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தமது வடுக்களுக்கு மருந்து தேடும் இலங்கை அணி

2017 ஆம் ஆண்டு நிறைவை எட்டியிருக்கின்ற தற்போதைய தருணத்தில் இந்த வருடத்தில் கடந்து சென்ற நாள்களைப் புரட்டிப் பார்க்கும் போது அவை இலங்கை கிரிக்கெட் அணிக்கு கறுப்புப் பக்கங்களாகவே அமைவதைக் காண முடியும்.

ஜனவரியில் தென்னாபிரிக்காவால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் வெள்ளையடிக்கப்பட்ட இலங்கை, மார்ச் மாதம் வரலாற்றில் முதற்தடவையாக பங்களாதேஷ் மூலம் டெஸ்ட் போட்டியொன்றில் வீழ்த்தப்பட்டிருந்தது. அதனை அடுத்து ஸிம்பாப்வே உடனான டெஸ்ட் தொடரில் நல்ல முடிவைக் காட்டியிருந்தாலும் ஒகஸ்ட் மாதம் மீண்டும் சொந்த மண்ணில் வைத்து இந்தியாவுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் வரலாற்றில் முதற்தடவையாக 3:0 என வெள்ளையடிக்கப்பட்ட இலங்கை அணி ஒருநாள் தொடர், ரி-20 தொடர் ஆகிய வற்றையும் (9:0 என) முழுமையாகப் பறிகொடுத்ததால் தொடர்ந்து பலவிதமான அழுத்தங்களுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்தது.

இதனையடுத்து ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை வீரர்கள் பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரை 2:0 எனக் கைப்பற்றி எதிர்பாராத முறையில் வரலாறு படைத்தது குறிப்பிடத்தக்கது. அத்தொடரில் பங்கேற்ற இலங்கை அணியே தற்போது இந்தியாவை டெஸ்ட் தொட ரில் எதிர்கொள்ளப் போகின்றது. எனவே சொந்த மண்ணில் தாம் பெற்ற தோல்விகளுக்காக அயல் நாட்டு வீரர்களுக்கு இலங்கை அணியினர் பதிலடி தருவர்களா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

### டெஸ்ட் கிரிக்கெட்டின் உச்சத்தில் காணப்படும் இந்தியா

2015ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து இன்று வரை தாம் பங்குபற்றிய எட்டு டெஸ்ட் தொடர்களிலும் வெற்றி பெற்றிருக்கும் இந்தியா, அணித் தலைவர் விராட் கோஹ்லியின் தலைமையின் கீழ் தற்போது டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் நாடாக மாறியுள்ளது.

சரியான திட்டமிடல், போட்டிகளை உறுதித் தன்மையுடன் கையாளும் விதம், சீரான அணிக் கட்டமைப்பு, தேசிய அணிக்காக உள்ளூர் போட்டிகளில் (ரஞ்சி கிண்ணம் போன்றவற்றில்) வீரர்கள் தயார்ப் படுத்தப்படும் விதம் என்பவையே இந்திய அணியின் இன்றைய அபரிமிதமான வளர்ச்சிக்குக் காரணங்களாக அமைகின்றன.

இதனால், எந்த அணியாக இருப்பினும் தற்போது அவர்கள் இலகுவாக வீழ்த்திவிடுகின்றனர். இதனால் அண்மைய நாள்களில் கத்துக்குட்டி அணியாகக் கருதப்படும் அளவுக்கு மாறியிருந்த இலங்கையுடன் அவர்கள் விளையாடியிருந்த டெஸ்ட் தொடர் முழுக்க இந்திய அணிக்கு சார்பாகவே அமைந்திருந்தது.

இன்னும் இந்தியாவை அவர்களது சொந்த மண்ணில் வைத்து வீழ்த்துவது என்பது சவாலின் உச்சக் கட்டம் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எனவே, தமது துணைக் கண்ட நாடான இலங்கைக்கு இந்தியா எந்தக் கணத்திலும் நெருக்கடி தரும் ஓர் அணியாகவே இந்த டெஸ்ட் தொடரில் அமையும்.

### முன்னாள் அணித் தலைவரோடு மீண்டும் இலங்கை அணி

இலங்கை அணியின் தொடர் தோல்விகளுக்கு முக்கிய காரணிகளில் ஒன்று வீரர்களின் தொடர் உபாதையாகும். இலங்கை அணிக்காக விளையாடும் வீரர் ஒருவர் அவரது உச்ச நிலையில் இருக்கின்ற போது துரதிஷ்டவசமாக உபாதைக்கு உள்ளாகி விடுகின்றார். இதில் முன்னாள் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், அசேல குணரத்ன, குசல் பெரேரா மற்றும் தம்மிக்க பிரசாத் ஆகியோர் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

இவ்வீரர்கள் அனைவரும் தற்போது போதிய உடற்தகுதியைப் பெற்றிருக்கின்ற போதிலும் போட்டி அனுபவங்களை கருத்திற் கொண்டு மத்தியூஸுக்கு மாத்திரமே அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. 2016ஆம் ஆண்டின் ஒகஸ்ட் மாதத்தில் இருந்து இன்று வரை 37 சர்வதேசப் போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடும் வாய்ப்பை மத்தியூஸ் இழந்திருக்கின்றார். இதில் ஆறு டெஸ்ட் போட்டிகள் அடங்குகின்றன. மத்தியூஸ் அண்மையில் பாகிஸ்தானுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரிலும் பங்கேற்காது போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அஞ்சலோ மத்தியூஸ்

அபாயம் கருதி சகலதுறை வீரரான மத்தியூஸ் இனி டெஸ்ட் போட்டிகளில் பந்துவீசுவதில்லை என ஓர் அறிவிக்கை தெரிவிக்கின்றமையால் அவரை முழு நேரத் துடுப்பாட்ட வீரராகவே இந்த டெஸ்ட் தொடரில் பார்க்க முடியும்.

தற்போதைய இலங்கைக் குழாத்தில் காணப்படும் வீரர்களில் இரண்டு பேர் மாத்திரமே இந்தியாவில் முன்னர் டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவத்தைக் கொண்டுள்ளனர். அதிலொருவரான மத்தியூஸ், இந்தியாவுக்கு எதிராக இதுவரையில் 764 ஓட்டங்களை 2 சதங்கள் மற்றும் 3 அரைச்சதங்கள் அடங்கலாகக் குவித்துள்ளார். எனவே, அனுபவமிக்க மத்தியூஸ் நான்காம் இலக்க துடுப்பாட்ட வீரராக வந்து இலங்கை அணியின் துடுப்பாட்டத்தை வலுப்படுத்துவார் என எதிர்பார்க்க முடியும்.

### இளம் வீரர்களோடு நிரம்பியிருக்கும் எஞ்சிய இலங்கை குழாம்

ஏனைய இலங்கை வீரர்களில் ரங்கன ஹேரத்தை தவிர தற்போதைய குழாத்தில் காணப்படும் ஒருவரேனும் இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவத்தை பெறாத நிலையில் உள்ளனர். ஏனெனில் இறுதியாக 2009ஆம் ஆண்டிலேயே இலங்கை அணி டெஸ்ட் தொடரொன்றில் விளையாட இந்தியா பயணித்திருந்தது.

இருக்கும் வீரர்களில் இலங்கையின் துடுப்பாட்டத்தினை வலுப்படுத்த எதிர்பார்க்கப்படும் முக்கிய வீரர் திமுத் கருணாரத்ன ஆவார். ஒகஸ்ட் மாதத்தில் இந்திய அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இலங்கை சார்பாக அதிக ஓட்டங்களை (285) குவித்த திமுத் கருணாரத்ன பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட்டிலும் அதிக ஓட்டங்கள் (306) குவித்தமைக்காக தொடர் நாயகன் விருதையும் பெற்றிருந்தார்.

அடுத்து பந்து வீச்சை நோக்குமிடத்து இலங்கையின் முதுகெலும்பாக ரங்கன ஹேரத்தைக் கூற முடியும். இந்தியாவுடனான இறுதி டெஸ்ட் தொடரில் ஹேரத் குறிப்பிடும் படியான ஆட்டத்தைக் காட்டாவிட்டாலும் பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடரில் மொத்தமாக 16 விக்கெட்டுக்களைச் சாய்த்து இலங்கையின் வெற்றிக்கு உதவியிருந்தார். ஹேரத் இந்த வருடத்தில் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்களில் இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுத்துறையை அனுபவம் குறைந்த வீரர்களான லஹிரு கமகே, தசுன் சானக்க மற்றும் விஷ்வ பெர் னாந்து ஆகியோருடன் சேர்ந்து சுரங்க லக்மால் முன்னெடுப்பார் என நம்பப்படுகின்றது.

# கரேத் பேலேவை விடுவிக்க ரியல் மட்ரிட் முடிவு



காயத்தால் அவதிப்பட்டு வரும் கரேத் பேலேவை விற்க ரியல் மட்ரிட் முடிவு செய்துள்ளது. அவருக்குப் பதிலாக கிலியன் பப்வேவை வாங்க முயற்சி செய்கின்றது.

ஸ்பெயின் உதைபந்து கழக அணிகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது ரியல் மட்ரிட். கடந்த பருவ காலத்தில் ஐரோப்பிய சம்பியன் லீக் மற்றும் லா லிகா ஆகியவற்றைக் கைப்பற்றி அசத்தியது.

அந்த அணியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ உடன் இணைந்து முக்கிய வீரராக வேல்ஸ் நாட்டின் கரேத் பேலே திகழ்ந்து வருகிறார். கடந்த 2013ஆம் ஆண்டு டோட்டன்ஹாம் அணியில் இருந்து 85 மில்லியன் பவுண்டுக்கு கரேத் பேலேவை ரியல் மட்ரிட் அணி வாங்கியது.

தற்போது காயத்தால் கரேத் பேலே அவதிப்பட்டு வருகிறார். 28 வயதாகும் பேலே செப்ரெம்பர் 19ஆம் திகதியில் இருந்து ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடவில்லை. காயம் குணமடைய மேலும் நாள்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 19 காயத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இதனால் அவரை விற்க ரியல் மட்ரிட் முடிவு செய்துள்ளது. அதேவேளையில் மொனாக்கோ அணியில் இருந்து பி.எஸ்.ஜி. (பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன்) அணிக்காக லோன் அடிப்படையில் சென்றுள்ள கிலியன் பப்பேவை வாங்க ரியல் மட்ரிட் விரும்புகிறது.

பப்வேவை ரியல் மட்ரிட் வாங்குவது அவ்வளவு சுலபம் அல்ல. அவருக்காக சுமார் 178 மில்லியன் பவுண்ட் செலவழிக்க வேண்டியிருக்கும். இந்த வருடம் நெய்மரை அதிக விலை கொடுத்து பி.எஸ்.ஜி. வாங்கியுள்ளது. இதனால் அடுத்த வருடம் பப்வேவை வாங்க முயற்சி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ண உதைபந்து: டென்மார்க் அணி தகுதி

உலகக் கிண்ண உதைபந்துப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் டென்மார்க் அணி, அயர்லாந்தை வீழ்த்தி உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றது.

உலகக் கிண்ண உதைபந்துப் போட்டி அடுத்த ஆண்டு ரஷ்யாவில் நடக் கிறது.இந்த நிலையில் டுப்ளின் நகரில் நேற்றுமுன்தினம் நடந்த தகுதிச் சுற்று ஆட்டத்தில் டென்மார்க் 5:1 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வீழ்த்தி உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றது. அந்த அணி 5 ஆவது முறையாகத் தகுதி பெற்றுள்ளது.

இன்னும் 2 அணிகள் மட்டுமே தகுதி பெற வேண்டும். இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஆஸ்திரேலியா- ஹோண்டுராஸ், பெரு- நியூசிலாந்து அணிகள் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கெய்ல் இல்லாத பாக். சூப்பர் லீக்



பாகிஸ்தான் சூப்பர் லீக் 2018 பருவகாலத்திற்கான வீரர்கள் ஏலத்தில் மேற்கிந்தியச் சிக்ஸர் மன்னன் கிறிஸ் கெய்லை எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை.

ரி-20 கிரிக்கெட் லீக் என்றாலே ரசிகர்களின் நினைவுக்கு வருபவர் அதிரடி மன்னன் கிறிஸ் கெய்ல்தான். அதிரடிச் சதம், கிச்சர் மழை என ரசிகர்களை குஷிப்படுத்தியவர். இவர் இல்லாத ரி-20 கிரிக்கெட் லீக் தொடரே இல்லை என்று கூறும் அளவிற்கு பிரபலம் பெற்றவர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 கிரிக்கெட் தொடரை நடத்தி வருகிறது. இரண்டு பருவ காலங்கள் முடிந்துள்ள நிலையில் 3ஆவது பருவ காலம் அடுத்த வருடம் நடைபெற இருக்கின்றது.

இதற்கான வீரர்கள் ஏலம் நடைபெற்றது. இதில் 308 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 501 பேர் இடம்பிடித்திருந்தனர். இதில் கிறிஸ்கெய்லும் ஒருவர். ஆனால், எந்த அணி உரிமையாளர்களும் கிறிஸ் கெய்லை ஏலம் எடுக்கவில்லை. இது அனைவரையும் ஆச்சர்யத்தில் மூழ்கவைத்துள்ளது.

ஆனால், சமீப காலமாக கெய்ல் சரியான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. மேலும், தொடர் முழுவதும் அவர் பங்கேற்க முடியாத நிலை உள்ளது. இதனால்தான் அவரை ஏலத்தில் எடுக்கவில்லை என்று அணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பங்களாதேஷ் பிரீமியர் லீக் : 19 பந்தில் அரைசதம்



பங்களாதேஷ் பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட்டில் மேற்கிந்தியத்தீவு அதிரடி மன்னன் பொல்லார்டு 19 பந்தில் அரைச்சதம் அடித்துள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சார்பில் பங்களாதேஷ் பிரீமியர் ரி-20 லீக் தொடர் நடைபெற்று வருகிறது. டாக்காவில் நேற்று நடைபெற்ற போட்டி ஒன்றில் டாக்கா டைனமிட்ஸ் - டைட்டன்ஸ் அணிகள் மோதின. டைனமிட்ஸ் அணி நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி டைட்டன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டம் செய்து 5 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டாக்கா டைனமிட்ஸ் அணி களம் இறங்கியது. டைனமிட்ஸ் அணி சார்பில் பொல்லார்டு 19 பந்தில் அரைச் சதம் அடித்து அசத்தினார். தொடர்ந்து விளையாடிய அவர் 24 பந்தில் 55 ஓட்டங்களைக் குவித்தார். அதில் 3 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கும்.

இவர் ஆட்டமிழந்ததும் டைனமிட்ஸ் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. பின்னர் ஒரு பந்து மீதமுள்ள நிலையில் 6 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

# செல்லப் பிராணிக்கு பயிற்சி அளிக்கும் டோனி

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் டோனி ராஞ்சியில் உள்ள தனது வீட்டில் செல்லப்பிராணியான நாய்க்கு பயிற்சி அளிக்கும் வீடியோ இணையத் தளத்தில் வைரலாகப் பரவி வருகிறது.

இந்திய கிரிக்கெட் அணி இன்று முதல் இலங்கை அணியுடன் டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இந்த நிலையில் டோனி டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். அதனால் அவர் தற்போது தனது சொந்த வேலைகளைப் பார்த்து வருகிறார். சமீபத்தில் டுபாயில் தனது முதல் கிரிக்கெட் அக்கடமியைத் தொடங்கினார்.

டோனி ராஞ்சியில் இருக்கும் தனது வீட்டில் இப்போது நேரம் செலவழித்து வருகிறார். அவர் தனதுவீட்டில்மூன்றுநாய்களைச்செல்லப்பிராணிகளாக வளர்த்து வருகிறார். அவற்றுடன் அவர் விளையாடும் வீடியோக்கள் அவ்வப்போது இணையத் தளத்தில் பதிவிடப்பட்டு வைரலாகப் பரவியுள்ளது.இந்தநிலையில், இப்போது அவர் தனது செல்லப்பிராணி நாயுடன் விளையாடும் வீடியோ தற்போது இணைய தளத்தில் பதிவிடப்பட்டு வைரலாகப் பரவி வருகிறது.



## தீர்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ.

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரியதீர்வுகளைக் கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி இரா. சம்பந்தன் ஏன் உணரவில்லை? என நாமல் ராஜபக்ஷ முன்னர் கேள்வி எழுப்பி யிருந்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாமைக்குப் பெரும்பான்மைச் சமூகமே காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதிலளித்திருந்தார்.

அவரதுபதில்குறித்துநாமல் ராஜபக்ஷ நேற்று மீண்டும் கருத்துவெளியிட்டுள்ளார். இது தொடர்பில்அவர்தனதுகீச்சகப் பக்கத்தில் இணைப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:–

மிகவும் அனுபவம் வாய்ந்த வரும் நான் மதிக்கத்தக்க அரசியல்வாதியாக விளங்கும் சம்பந்தன் ஐயா , அரசியல் தீர்வைக் கண்டறிவதில் தோல்வியுற்றதன் காரணமாக, தமிழ் இளைஞர்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் காண முடியாது எனக் கூறும் இந்த விளக்கம்எனக்குவியப்பாகவும் ஏமாற்றமாகவும் உள்ளது.

தமிழ்த்தேசியவாதஅரசியல் வாதிகள் தங்கள் சொந்த அரசியல் அபிலாஷைகளுக்காக இலங்கை இளைஞர்களின் எதிர் காலத்தை இன்னும் எவ்வளவு காலம் வீணடிக்கப் போகிறார்கள்?

சம்பந்தர் ஐயா இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணமுடியாததற்குப் பெரும்பான்மைச் சமூகம் மட்டுமே காரணம் என கடபமான ஒரு கருத்தை முன்வைத்துள்ளார். ஒரு பண்புள்ள மனிதரான சம்பந்தன் ஐயா, பல தசாப்தங்களாகத் தொடரும் அரசியல் தீர்வுசம்பந்தமானபிரச்சினைக்கான முட்டுக்கட்டை பெரும்பான்மை இனத்தினர் மட்டுமே என இனவாதத்தை தூண்டும் விதமாகக் கூறுவது அழகல்ல.

மேலும் இனவாதக்கருத்துக்கள்எந்தவொருசமூகத்தினதும் பிரதிபலிப்பாகாது. துரதிர்ஷ்டவசமாக ஒவ்வொரு சமூகமும் இனவெறியாளர்கள் மற்றும் பெருங்குழப்பவாதிகளை கொண்டுள்ளது.

அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம்ஐயாவின்ஜனநாயகமற்ற கோரிக்கையான 50/50 இல், 70 வீதப் பெரும்பான்மையினரின்உரிமையைக்குறைத்து, 50 வீத நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் எனும் கோரிக்கையாகும். இது எப்படிச்சாத்தியம்? எப்பொழுதும் பெரும்பான்மை இனத்தவரை நீங்களே சீண்டி விட்டு, எம்மைபார்த்து இனவாதிகள் எனக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கின்றது ஐயா? மேலும் தமிழ்த் தேசியவாதிகளால் எண்ணற்ற அரசியல் மாதிரிகள் என்ற பெயரில் ஒரு பிரிவினையான இனவாதத் தாயகத்தை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளும் ஒரு நீடித்த தீர்வு காணப்படுவதைத் தடுக்கின்றன. அரசுகள்பேச்சுக்கு இறங்கிவருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தலைமைகள் விட்டுக் கொடுப்பற்ற நிபந்தனைகளை முன்வைத்தமைதான் இழுபறிகளுக்குக் காரணம்.

நான் ஓர் அங்கமாக இருந்த அரசு, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், பயங்கரவாதிகள்தமிழ்ச் சிறுவர்களையும் இளைஞர்களையும் பலவந்தமாகக் கொண்டுசெல்லப்படுவதையும் தடுத்ததுடன், 12 ஆயிரம் முன்னாள் போராளிகளைப் புனர்வாழ்வளித்து விடுதலை செய்து அவர்கள் சமுதாயத்தில் மீண்டும் இணைவதற்கு – இயல்பானவாழ்க்கையைநடத்துவதற்கு வழி வகுத்தது.

வடக்கு– கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பில்லியன்கள் முதலீடுசெய்யப்பட்டன. யுத்தம் முடிவடைந்தபின்னர் இடிபாடுகளுக்கு மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிப் பேசி பிரயோசனம் இல்லை. ஆகையால்தான் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவேஎமதுஅரசுவடக்கு – கிழக்கில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டது. ஆகையால்எனதுமுன்னையகூற்றை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். தமிழ் இளைஞர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் அதிகாரப்பகிர்வு என்ற பெயரில் தியாகம் செய்யப்படக்கூடாது.

நாம் இருவரும் வெவ்வேறு அரசியல் கொள்கைகளை கொண்டிருக்கலாம். ஆனால் முதலில்எமக்குவாக்களித்தமக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் – என்றுள்ளது.

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தோன்றிய பதற்ற நிலையால் மக்கள் செய்வதறியாது திகைத்தனர். பாடசாலைகளுக்குச் சென்ற பிள்ளைகளையும், கல்வி மற்றும் இதர தேவைகளுக்காகச் சென்றவர்களையும் அழைத்து வருவதற்காக நேற்றுக் காலையில் நாட்டின் பல இடங்களிலும் மக்கள் விழுந்தடித்து ஓடியதால் சுனாமி அச்சநிலை மேலும் வலுத்தது.

சுனாமி தொடர்பான செய்திகள் வெறும் வதந்திகளே எனவும் இதில் எந்தவித உண்மையும் இல்லை என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்ததை அடுத்து, இந்தப் பதற்ற நிலைமை தணிந்தது.

சுனாமி அச்சம் காரணமாகக் வடமராட்சி கிழக்குக் கரையோரப் மக்களிடையே பெரும் பதற்றம் தோன்றியது. இதனையடுத்து, சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை, மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று ஒலிபெருக்கி மூலம் யாழ். மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவினால் மக்களுக்கு அறிவிக்கப் பட்டது.

மக்கள் மத்தியில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து வடமராட்சி கரையோரப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் சிலமூடப்பட்டு மாணவர்கள் வீடு திரும்பினர் என்று தெரிவிக்கப் பட்டது.

மட்டக்களப்புஒந்தாச்சிமடம், அம்பாறையில் கல்முனை, பாண்டிருப்புப் பிரதேசங்களில் கிணறுகளின் நீர் திடீரென வற்றியது என்றும் இதனையடுத்து பதற்ற நிலைமை ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. பெற்றோர் அவசர அவசரமாகப் பாடசாலைகளில் இருந்து பிள்ளைகளை அழைத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிவித்தல் அனுப்புமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்நேற்றுஉத்தரவிட்டார்.

1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி இராணுவச் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட 24 இளைஞர்கள் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டனர். அவர்களில் 12 பேர் சார்பில் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மேல்நீதிமன்றில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் 9 பேரின் மனுக்கள் 2002ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு மேல்நீதிமன்றால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டன. நீதிமன்றில் விசாரணைகள் முடிவுறுத்தப்பட்ட பின்னர், அந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரி உட்பட இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்ட நிலையில், யாழ்.மேல் நீதிமன்றுக்கு அது மீளப் பரப்படுத்தப்பட்டது. எனினும் இந்த வழக்கை யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது என அப்போதைய யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் 2003 ஆம் ஆண்டு தாக்கல் செய்த மனுவை அடுத்து, இந்தவழக்கு அந்தக் காலப் பகுதியில் அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

கடந்த 2003ஆம் ஆண்டு அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு வழக்கு மாற்றம் செய்த பின்னர் கடந்த 14 வருட காலமாக இந்த வழக்குக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தத் தகவலும் தெரியாது.

அதனால்குறித்தவழக்குகள் மீள விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படவேண்டும் என யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றை சுட்டிக்காட்டி, வேறொரு மேல் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் வழக்கொன்றை இன்னொரு மேல் நீதிமன்றில் மீளத் திறக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், 9 பேரின் ஆள்கொணர்வு மனுக்களைத் தள்ளுபடி செய்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட மூவரின் மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நேற்றுப் புதன்கிழமை திகதியிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்டபோது மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் சிவாஜினி மற்றும் குருபரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

மூவர்சார்பான மனுக்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. எதிர் மனுதாரர்களாகக் குறிக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதி, யாழ்ப்பாணமாவட்டஇராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்புமாறு மன்றுஉத்தரவிடுகின்றது. பிரதிவாதிகள் பதில் அளிக்கும் வகையில் மனுக்கள் மீதான விசாரணை 2018ஆம் ஆண்டு ஜனவரி18ஆம்திகதிவரை ஒத்திவைக்கப்படுகின்றது என யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார். (107)

## கோபாலரத்தினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) (வயது 87) நேற்று மட்டக்களப்பில் காலமானார்.

தமது இளவயதில் வீரகேசரி நாளிதழில் ஒப்புநோக்குநராகச் சேர்ந்த அவர் பின்னர் அங்கு உதவி ஆசிரியராகி, சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும் பணி புரிந்தார்.

1958 இல் 'ஈழநாடு' பத்திரிகை நாளிதழாக வெளியானபோது அதன் செய்தி ஆசிரியராக இணைந்த கோபாலரத்தினம், 1980களின் முற்பகுதி வரை அதன் ஆசிரிய பீடத்தின் மைய விசையாக இயங்கினார்.

1985 இல் 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆசிரியரான அவர், 1987இல் இந்திய அமைதிப் படைகள் இலங்கைக்குள் புகுந்தபோது கைது செய்யப்பட்டு பல மாதங்கள் இந்தியப் படைகளின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் வெளியே வந்ததும் 'ஈழ மண்ணில் இந்தியச் சிறை' என்ற தலைப்பில் அவர் எழுதிய பரபரப்புத் தொடர் 'ஜுனியர் விகடன்' பத்திரிகையில் வெளியாகிப் பின்னர் நூலுருவும் பெற்றது.

இந்தியப் படை இலங்கையிலிருந்து புறப்பட்ட பின்னர், 'ஈழநாதம்', 'நமது நாடு' ஆகிய பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றியகோபாலரத்தினம் கொழும்பில் 'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரிய பீடத்திலும் சிறிது காலம் தமது எழுத்துப் பணியைத் தொடர்ந்தார்.

'எஸ்.எம்.ஜி', 'கோபு' என்ற பெயர்களில் எழுதி வந்த கோபாலரத்தினம் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மூத்த – தேர்ச்சி பெற்ற – ஒரு பத்திரிகையாளராக எப்போதும் மதிக்கப்பட்டவர். ஈழத்துப் பத்திரிகைத் துறையில் சுமார் 65 வருட எழுத்துப் பணியாற்றிய ஜாம்பவானாக அவர் மதிக்கப்படுகின்றார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு, பூம்புகார், 4ஆம் குறுக்குத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்எனத்தெரிவிக்கப்பட்டது.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது, கோட்டை தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமானதே? என ஊடகவியாளாளர்கள் ஆளுநரிடம் கேள்வி எழுப்பினர்.

கோட்டைக்குள்டச்சு, போர்த்துக்கேய ஆங்கிலேய, இலங்கைப் படையினர் மற்றும் விடுதலைப்புலிகள் நிலை கொண்டிருந்தனர். அப்போது அது தொல்லியல் திணைக்களத்திற்கு சொந்தமில்லையா? இப்போதுமாத்திரம் எப்படிச்சொந்தமானது?என ஆளுநர் பதிலுக்குக் கேள்வி எழுப்பினார். (107)

## சந்திகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸ் சுற்றுக்காவல் நடவடிக்கைகளைமுன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு வடக்கிலுள்ள அத்தனை பொலிஸ் நிலையங்களுக்கும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும்27ஆம்திகதிதமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி ஆகுதியான மறவர்களுக்கான மாவீரர் நினைவேந்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்தப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாகத் தொடரும் வாள்வெட்டுச்சம்பவங்களை அடுத்து இந்த உத்தரவு தமக்குக் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வழங்குமாறு வலியுறுத்தி வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுப் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டனர். அத்துடன் ஆளுநர் அலுவலகத்தையும் அவர்கள் முற்றுகையிட்டனர். இந்தப் போராட்டத்தின்போதே அவர்கள் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தனர்.

போராட்டம்குறித்துஅவர்கள் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டாரிகளாகச் சுமார் 3ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உள்ளனர். இவர்களுக்கு அரச வேலைவாய்ப்பை வலியுறுத்தி வடக்கு மாகாணப் பட்டாரிகள்கடந்தசிலமாதங்களுக்கு முன்பு தொடர்ச்சியான உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்தப் போராட்டம் 143 நாள்கள் வரை நீடித்திருந்தது. இதனையடுத்து பயிற்சி அடிப்படையில் அபிவிருத்தி உதவியாளராகஇந்தவருடத்துக்குள் நியமனம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அவ்வாறான எந்த விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனாலேயே நாம் தற்போது மீண்டும் போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. விரைவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் எமக்கான அரச வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.அவ்வாறுவழங்கப்படாவிட்டால் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை வடக்குமாகாணப்பட்டாரிகளாகிய நாம் அனைவரும் புறக்கணிப்போம் – என்றனர்.

யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து, பேரணியாகச் சென்ற பட்டாரிகள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். பின்னர் தமது கோரிக்கை தொடர்பான மகஜரைஆளுநரிடம்கையளித்தனர். (107)

## வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெற்கிலும் உள்ள ஒன்றுதான் – என் றார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர்செயலகத்தில்நேற்றுக் காலை இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில்பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ஆளுநர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக வாள்வெட்டுக் கும்பல்களின்அச்சுறுத்தல்கள் –அடாவடிகள்அதிகரித்துள்ளன. அவற்றைக்கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அத்துடன், அந்தக் கும்பல்களுக்கும் பொலிஸாருக்கும் தொடர்பிருப்பதாகவும் மக்கள் மத்தியில்கருத்துக்கள்உள்ளன. இந்த நிலையிலேயே வடக்கு மாகாணஆளுநர்இந்தவிடயங்களைக் குறிப்பிட்டார். (107)

# இலங்கையில் அரசியலிலும் சட்டவாக்கத்துறையிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை!

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

அரசியலிலும் சட்டவாக்கத் துறையிலும் பெண்களின் பிரதி நிதித்துவம்போது மானதாகஇல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதி நிதித்துவம் தொடர்பான தெளிவுபடுத்தல் செயற்றிட்டம் ஜனாதிபதி மைத் திரி பால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.




கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 'பெண்களுக்கு அதி காரம் - நாட்டிற்கு மாற்றம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற் றது.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச சேவையில் பெண்களின் பங்களிப்பு உரிய அளவில் காணப் பட்ட போதிலும் அரசியலிலும் சட்டவாக்கத்துறையிலும் பெண் களின் பிரதிநிதித்துவம் போது மானதாக இல்லை .

மேலும், தற்போதைய அரசு பெண்களின் பிரதிநிதித்துவத்திற் கான சட்டங்களை உருவாக்கி செயற்படுத்துகின்றது.

சமூகத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை பெண்கள் வேறு பட்ட கோணத் தில் அணுகுகின்ற னர். தமது அரசு பெண்களின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண் டுள்ளது.

உலகின் அபிவிருத்தியடைந்த பலநாடுகளில்சகலதுறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகளவிலோ அல்லது சமமான அளவிலோ காணப்படுகிறது என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

'பெண்களுக்கு அதிகாரம் - நாட்டிற்கு மாற்றம்' எனும் தொனிப் பொருளின் இலச்சினையை அறி முகம் செய்தலும் முகப் புத்தகப் பக்கத்தை ஆரம் பித்து வைத்தலும் இதன்போது ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டது.

நாடு முழுவதிலும் மேற்கொள் ளப்பட்ட பெண்களை தெளிவூட் டும் செயற்றிட்டத்தின் அறிக்கை மற்றும் கையெழுத்து ஆவணம் அமைச்சர்பைஸர்முஸ்தபாவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட் டது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான பைஸர் முஸ்தபா, சந்திராணி பண்டார, தலதா அத்துகோரல, பிரதி மற்றும் இராஜாங்க அமைச் சர்கள் அனோமா கமகே, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ரஜின கடுகதி ரயில் தடம்புரண்டது; வடக்கு ரயில் போக்குவரத்து பாதிப்பு!

கொழும்பு, நவ. 16

வடக்கு ரயில் பாதையில் ரயில் சேவைக்குத் தடை ஏற்பட்டுள்ளது.

மதவாச்சி மற்றும் பரசன் கஸ்வேவ ரயில் நிலை யங்களுக்கிடையில் ரயில் ஒன்று தடம்புரண்ட மையே இதற்குக் காரணமாகும்.

மாத்தறையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற ரஜரட்டை ரஜின என்ற கடுகதி ரயில் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் தடம்புரண் டுள்ளது.

இதன் காரணமாக இந்த ரயில் பாதையில் சேவை யில் ஈடுபடும் ரயில் அனுராதபுரம் ரயில் நிலையம் வரையிலேயே பயணத்தை மேற்கொள்ளும்.

இதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ரயில் மதவாச்சி வரையிலேயே பயணத்தை மேற்கொள்ளும் என்று ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நேற்று அதிகாலை 5.10 மணிக்கு கல்கிசையிலிருந்து காங்கேசன்துறை வரை சேவை யில் ஈடுபடும் நகரங்களுக்கிடையிலான ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# இராணுவத்தினரின் பொதுமன்னிப்புக் காலம் நீடிப்பு!

இராணுவத்தினருக் கான பொதுமன்னிப்பு காலம் மேலும் ஒரு வார காலத்திற்கு நீடிக்கப்பட் டுள்ளது.

இராணுவத் தலைமை யகத்தால் பொது மன் னிப்பு காலம் கடந்த ஒக் ரோபர் 23 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை வழங்கப்பட்டது.

மேலும், இந்தக் காலப் பகுதியினுள் 8 கடேட் அதிகாரிகளும், 10 அதி காரிகள் உட்பட 8034 இராணுவ வீரர்கள் படை யணிதலைமையகங்களில் சரணடைந்துள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்று தலை மறைவாக உள்ள இரா ணுவத்தினருக்குவேலை வாய்ப்பை வழங்குதல் நாட்டை விட்டு வெளி யேறஎத்தணிக்கின்றமை போன்றகுற்றவியல்தண் டனையின் 133 ஆவது பிரிவின் படி நீதிமன்றத் தில் தண்டிக்கப்படும் குற்றமாகும்.

மேலும், அனைத்து பிரதேசங்களிலுள்ள மதகுருமார்கள் மற்றும் கிராம சேவக உத்தியோ கத்தர்களுக்குஅவர்களது பிரதேசத்தில்இராணுவத் திலிருந்து தப்பிச் சென்ற படையினருக்கு சட்ட ரீதியாக இராணுவ சேவையிலிருந்து வில கிச் செல்வதற்கு இம் மாதம் 22 ஆம் திகதி வரை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளதாக அறிவுறுத் தல் வழங்குமாறு வலி யுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் பாக இராணுவ பொது மன்னிப்பு காலத்தினுள் தலைமையகங்களுக்கு சென்று சட்டபூர்வமாக இராணுவ சேவையி லிருந்து விலகிச்செல்லு மாறு அறிவுறுத்தப்பட் டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பு ரைக்கமைய இராணுவத்தளபதி லெப் டினண்ட்ஜெனரல்மகேஷ் சேனாநாயக மேற்பார் வையில் இந்த பணிகள் அனைத்து இராணுவ தலைமை யகங்களிலும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை. வெலிஓயாப் பகுதியில் மீட்கப்பட்டன ஜொனி மிதிவெடிகள்

முல்லைத்தீவு, நவ. 16

முல்லைத்தீவு மண லாறு வெலி ஓயா பகுதி யில் விடுதலைப் புலி களால் புதைத்து வைக் கப்பட்ட மிதிவெடிகள் சிறப்பு அதிரடிப்படை யினரால் மீட்கப்பட்டுள் ளன.



இந்தப் பகுதியில் மிதி வெடிகள் புதைத்து வைக் கப்பட்டுள்ளன என இரகசியப் பொலிஸாருக் குக்கிடைத்ததகவலைய டுத்து நீதிமன்ற உத்தர விற்கு அமைய அந்தப் பகுதிக்கு நேற்று முன் தினம் சென்றசிறப்பு அதிர டிப்படையினர் அந்தப் பகுதியைத் தோண்டியுள் ளார்கள்.

இதன்போது 41 மிதி வெடிகளும் அதற்கான வெடிப்பிகள்19 ஆகியன வும் கண்டெடுக்கப்பட் டுள்ளன.

# கண் சத்திரசிகிச்சையில் கிருமி; மாகாண விசாரணைகள் நிறைவு!

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார்வைத்தியசாலை ஒன்றில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திரசிகிச்சையின் போது கிருமித் தொற்று ஏற்பட்டதாகத் தெரிவிக் கப்படும்சம்பவம்தொடர் பான மாகாண மட்ட விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர் பில் உயர்மட்ட விசார ணைகளை மேற்கொள் வதற்கு மத்திய சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். திருவாகரன் தெரி வித்தார்.

தனியார் வைத்திய சாலைக்கு எதிரான விசா ரணைகளை, மாகாண ரீதியில் முன்னெடுக்க முடியாது என்பதால், மத் திய அரசுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மாகாண சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கு அமைய, சுகாதார பணிப்பாளர் தலைமையிலான குழு அந்த தனியார் வைத் தியசாலை தொடர்பில் நடவடிக்கைஎடுத்துள்ளது எனவும் வட மாகாண சுகா தார அமைச்சின் செயலா ளர் எஸ். திருவாகரன் சுட் டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் வைத் தியசாலை ஒன்றில், கடந்த மாதம் 21 ஆம் திகதி 10 பேருக்கு கண் சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

இதன்போது கண் சத் திர சிகிச்சைக்கு உட் படுத்தப்பட்ட வர்களில் 9 பேர் கிருமித்தொற் றால் பாதிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து, அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு, பின்னர் அவர்களில் 5 பேர் தேசிய கண் வைத் தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான விசா ரணைகள் நிறைவு பெறும் வரை, வைத்திய சாலையில் கண் சத்திரசி கிச்சைகளை மேற்கொள் ளத் தடை விதிக்கப்பட் டுள்ளதுடன், சத்திரசிகிச் சைப் பிரிவுக்கும் சீல் வைக்கப்பட்டது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களால் தனியார் வைத்திய சாலைக்கு கோரிக்கைக் கடிதமொன்றும்அனுப்பி வைக்கப்பட்டது.

இருந்தபோதிலும், இது எதிர்பாராமல் நடை பெற்ற சம்பவம் எனவும் அது தொடர்பில் வைத் தியசாலை மட்டத்தில் முழுமையான விசார ணைகள்முன்னெடுக்கப் படுகின்றன எனவும் வைத்தியசாலை நிர்வா கத்தால் அண்மையில் விடுக்கப்பட்ட அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக் கது.

# மலேரியாவை ஏற்படுத்தும் நுளம்புகள் வடக்கில் மட்டும் பரவியமை எப்படி?

## நாடாளுமன்றத்தில் டக்ளஸ் எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணம், நவ. 16

2016ஆம் ஆண்டு மலேரியா அற்ற நாடாக இலங்கையை உலக சுகாதார நிறுவனம் அறிவித்துச் சான்றிதழையும் வழங்கியுள்ளது ஆனால், மலேரியா நோயைப் பரப்பக் கூடிய நுளம்புகள் மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த வருடம் இறுதியில் இனங்காணப்பட்டிருந்ததாகவும், இந்த நுளம்புகள் தற்போது மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் காணப்படுவதாகவும் கூறப்படும் நிலையில், வவுனியாவில் நகர மத்தியிலும், யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை அண்டியதாகவும் இந்த நுளம்பு இனம் அதிகரித்துக் காணப்படுவது எப்படி?


இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவிடம் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையை மலேரியா அற்ற நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ள உலக சுகாதார நிறுவனம், கடந்த 2016ஆம் ஆண்டு அதற்கான உத்தியோகப் பூர்வச் சான்றிதழை எமது கௌரவ சுகாதார அமைச்சர் மருத்துவக் கலாநிதி ராஜித சேனாரத்னவிடம் வழங்கியிருந்தது. இந் நிலையில், இந்தியாவில் மிக அதிகளவில் காணப்படுகின்ற 'அனோபிலிஸ் ஸ்ரிபன்சி' என்ற நுளம்பு இனமே வடக்கில் காணப்படுவதாகத் தெரியவருகின்றது.

எனவே மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்ற மேற்படி நுளம்பு இனம் உரிய முறையில் இனங்காணப்பட்டுள்ளதா? இத்தகைய நுளம்பு இனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? மேற்படி நுளம்பு இனத்தின் பரவலாக்கங்கள் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் தவிர்ந்த வேறு மாவட்டங்களில் காணப்படுகின்றனவா? – என்றார்.




# 8 மாடுகளைக் கடத்தினர் என இருவர் பொலிஸாரால் கைது



பூநகரி நாச்சிக்குடாப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப் பத்திரங்கள் இன்றி 8 மாடுகளைக் கடத்திவந்த குற்றச்சாட்டில் இருவரை நேற்றுக் கைது செய்துள்ளனர் எனச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பட்டா ரக வாகனத்தில் மாடுகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வருகின்றனர் எனச் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. தனங்கிளப்புப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 8 மணியளவில் அந்த வாகனம் வழிமறிக்கப்பட்டது. அதில் பயணம் செய்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

8 மாடுகளும் பட்டா வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையைச் சாவகச்சேரிப் பொலிஸ் பரிசோதகர் கோகில அரியதாச தலைமையிலான குழுவினரே முன்னெடுத்தனர் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

### பரீட்சைத் திணைக்கள பதில் ஆணையாளராக சனத் பூஜித நியமனம்

பரீட்சைகள் பதில் ஆணையாளராக பீ. சனத் பூஜித நியமிக்கப்பட்டுள்ளார் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே. புஷ்பகுமார நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பரீட்சைகள் பதில் ஆணையாளராக பீ. சனத் பூஜித நியமிக்கப்பட்டுள்ளார்.

# பிரிட்டன் சுற்றுலாப் பயணிக்கு ஆறு இலட்சம் ரூபா இழப்பீடு

## புத்தரின் படத்தை உடலில் பச்சை குத்தியமை தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு



புத்தரின் படத்தை உடலில் பச்சை குத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டில், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட பிரிட்டன் சுற்றுலாப் பயணிக்கு, 6 இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு இலங்கை வந்த பிரிட்டன் சுற்றுலாப் பயணியான, நயோமிமிச்சேல்கோல்மன், வலது கையில் புத்தரைப் பச்சை குத்தியிருந்தார் என்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இது தொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர்நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கில் நேற்று நீதியரசர்கள் அனில் குணரத்ன, ஈவா வணசுந்தர, நளின் பெரேரா ஆகியோர், தீர்ப்பை அறிவித்தனர்.

பிரிட்டன் சுற்றுலாப் பயணி தனது உடலில் பச்சை குத்திக் கொள்வது அவரது அடிப்படைச் சுதந்திரம் என்றும், அவரைக் கைது செய்ததன் மூலம் அவரது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் நீதியரசர்கள் தீர்ப்பளித்தனர்.

மனுதாரரான சுற்றுலாப் பயணிக்கு 5 இலட்சம் ரூபாவை அரசு இழப்பீடாக வழங்கவேண்டும் என்றும், அவரைக் கைது செய்வதற்குப் பொறுப்பாக இருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் தலா 50 ஆயிரம் ரூபா இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்த நீதியரசர்கள் குழாம், வழக்குச் செலவான 2 இலட்சம் ரூபாவையும் அரசே செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

# 3 புதிய அதிகாரிகளுக்கு நேற்று நியமனக் கடிதம்







வடக்கு மாகாணத்தில் மூன்று புதிய தலைமை அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று வழங்கினார்.

யாழ். மாநகரசபை ஆணையாளராகப் பதவி வகித்த பொ.வாகீசன் வடக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறைப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய ஆர்.ரி.ஜெயசீலன் யாழ். மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப்பட் டுள்ளார். வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த சிவராஜலிங்கம் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதால் காரணமாக தற்காலிகப் பணிப்பாளராக எஸ்.பி. சிவநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலர் ஏ.பத்திநாதன், ஆளுநரின் செயலர் எல்.இளங்கோவன். உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் பங்குபற்றினர்.


# மரண அறிவித்தல்



## தம்பிஐயா நகுலேஸ்வரன்

(காந்தி மாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்)

இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா நகுலேஸ்வரன் (காந்தி மாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்) 14.11.2017 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா – செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரவநாதர் – சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், சிவதீபன் (லண்டன்), நிரோசன் (ஆஸ்திரேலியா), லோகப்பிரதாப் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஜா (லண்டன்), சங்கீர்த்தா (ஆஸ்திரேலியா), யனார்த்தனி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன், காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் கமலாகரன், ரஜனி, மனோகர், பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கிருஸ்ணராசா மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'திருப்பதி',
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.